**கவனிக்க.-** 2010.06.18 ஆந் திகதிய வர்த்தமானி பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் காலி நீதிமன்றத்திற்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்கள மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில பிரதிகள் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1660 - 2010 ජූනි මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.24
1660 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1092 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூன் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபை

ஊவா மாகாண மாகாண சபையின் உத்தேச வீதிகள் வரைவு நியதிச்சட்டம்

ஊவா மாகாண மாகாண சபைக்குள் அமுல்படுத்தப்படுவதற்கு உத்தேசித்துள்ள, மேல் குறிப்பிடப்பட்டுள்ள வரைவு நியதிச்சட்டம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துகளை அறிந்து கொள்வதற்காக கீழே பிரசுரிக்கின்றேன்.

இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களின் பின் இவ்வரைவானது ஊவா மாகாண மாகாண சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படுமென்பது அறியத்தரப்படுகின்றது. இந்நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஏதேனும் கருத்துகள் சமர்ப்பிக்கப்பட உத்தேசமிருப்பின், இந்த அறிவித்தலின் பின் 10 நாட்களுக்குள் அக்கருத்துக்களை எழுத்து மூலம் கீழ் காணும் முகவரிக்கு எனக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

ஆர். எம். குமாரசிறி இரத்நாயக்க,
அமைச்சர்,
வீதி அபிவிருத்தி, வீடமைப்பு,
நீர்வழங்கல் நுகர்வோர் விவகார
கூட்டுறவு, உணவு வழங்கல் மற்றும்
விநியோக அமைச்சு,
(ஊவா மாகாண சபை).

அமைச்சு அலுவலகம்,
இல. 301, ஆர். எச். குணவர்தன மாவத்தை,
பதுளை,
2010.06.03.

### ஊவா மாகாண மாகாண சபையின் உத்தேச வீதிகள் வரைவு நியதிச்சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின் 9 ஆவது உப அட்டவணையின் முதலாம் பட்டியலின் 6 ஆவது பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு ஊவா மாகாணத்தினுள் வீதிகள் திட்டமிடப்படல், நிர்மாணித்தல், அபிவிருத்தி செய்தல், பராமரிப்பு செய்தல், மற்றும் நிர்வகித்தலுக்காக தேவைப்படும் சட்ட நடைமுறை ஒழுங்கினை ஏற்படுத்துதலுக்காகவும், அதனோடு தொடர்புபட்ட விடயங்களுக்கு ஏற்பாடுகளை செய்வதற்குமான நியதிச்சட்டமாகும்.

முகவுரை.

ஊவா மாகாணத்தினுள் காணப்படும் வீதிகளை அபிவிருத்திச் செய்தல், பராமரிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் உட்பட எதிர்காலத்தில் ஊவா மாகாணத்தினுள் நிர்மாணிக்கப்படவுள்ள வீதிகளை திட்டமிடுதல், நிர்மாணித்தல், அபிவிருத்தி செய்தல், பராமரிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் மூலம் சிறந்த வீதிக் கட்டமைப்பை ஏற்படுத்தி பராமரிப்பதன் மூலம் மாகாண மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கு ஊவா மாகாண மாகாண சபை பொறுப்பாக இருப்பதன் காரணமாக,

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் ஊவா மாகாண, மாகாண சபையால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகும்.

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்

1. இந்நியதிச்சட்டம் "ஊவா மாகாண வீதிகள் நியதிச்சட்டம்" என எடுத்துக்காட்டப்படுவதுடன், ஊவா மாகாணத்தின் ஆளுநரினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### I ஆம் பகுதி
### பொது

நியதிச்சட்டம் ஏற்புடையதாயிருத்தல்

2.(1) இதனகத்துப்பின்னர் செய்யப்படும் ஏற்பாடுகளுக்கமைய, இந்நியதிச்சட்டமானது அரசாங்கத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பராமரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் வீதிகளைத் தவிர்ந்த இங்கு கீழே 3 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சகல வீதிகளுக்கும் அமைவானதாக இருத்தல் வேண்டும்.

(2) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வருவதோடு மேலே (1) பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்நியதிச்சட்டத்திற்கு அமைவான சகல வீதிகள் தொடர்பிலும் 1861 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வீதிகள் கட்டளைச்சட்டம், 1902 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தோட்ட வீதிகள் கட்டளைச்சட்டம், 1956 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தோட்ட வீதிகள் (திருப்புதல்) சட்டம், 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கும் இசைவுற்றதாகும்.

(3) இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட இங்கு கீழே குறிப்பிடப்படுகின்ற ஏதேனும் ஒரு நடவடிக்கை இந்நியதிச்சட்டத்திற்கு இசைவான ஒரு நடவடிக்கையாக கருதப்படல் வேண்டும்.

மாகாண வீதியாக பிரகடனப்படுத்தல்.

3. இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்படுவதன் மூலம் (இதனகத்து பின்னர் "அமைச்சர்" என அறிமுகப்படுத்தப்படும்) ஊவா மாகாண மாகாண சபையின் வீதிகள் விடயப்பொறுப்பு அமைச்சரினால் இங்கு கீழே 6 ஆம் பந்தியில் 6 ஆவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு வீதி ஊவா மாகாண மாகாண சபைக்கு உரித்தான வீதியாக பிரகடனப்படுத்தப்படலாம்.

ஊவா மாகாண மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தை தாபித்தல்.

4. இந்நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்காக ஊவாக மாகாண மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் என்ற பெயரில் (இதனகத்துப்பின்னர் ''திணைக்களம்'' என குறிப்பிடப்படும்) திணைக்களம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

மாகாண வீதி பணிப்பாளர்.

5. (1) மேலே 4 ம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களத்தின் தலைவராக இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" என குறிப்பிடப்படுகின்ற மாகாண வீதிப்பணிப்பாளரொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். அவருக்கு உதவியளித்தலுக்காக மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச வாரியாக பிரதான பொறியியலாளர்கள், பிரதேச பொறியியலாளர்கள் அல்லது தகைமைபெற்ற அத்துடன் தகுந்த ஏனைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொகுதி நியமிக்கப்படலாம்.

(2) மேலே 5 ஆம் பந்தியில் (1) உப பந்தியின் கீழ் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளரானவர் இலங்கை பொறியியல் சேவையின் 01 ஆம் வகுப்பு உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

(3) மாகாண வீதிப்பணிப்பாளர், அத்திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும், அமைச்சரினதும் அத்துடன் இதனகத்துப்பின்னர், "செயலாளர்" என அறிமுகப்படுத்தப்படும் ஊவா மாகாண வீதி அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சு செயலாளரின் பொதுவான மற்றும் விசேட கட்டளைகளுக்கும், செயலாளரின் மேற்பார்வைக்கும், நிர்வாகத்துக்கும் உட்பட்டு செயற்படுதல் வேண்டும்.

## II ஆம் பகுதி
## அதிகாரங்களும், கருமங்களும்

விடயபொறுப்பு அமைச்சர் கொண்டுள்ள அதிகார கருமங்கள்.

6. (1) ஊவா மாகாண மாகாண சபையின் வீதிகள் விடயப்பொறுப்பு அமைச்சரினால் பிரதேசத் தேவைப்பாடுகள் மற்றும் திட்டமிடல் தொடர்பான தேவைகளை கருத்திற் கொண்டு, மாகாணத்தினுள் ஏதேனும் பிரதேசமொன்றின் வீதிகளை அபிவிருத்தி செய்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் தகுந்ததென அமைச்சரானவர் கருதும் பட்சத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற கட்டளையொன்றின் மூலம் அப்பிரதேசம் வீதிகள் அபிவிருத்தி பிரதேசமாக (இதனகத்துப்பின்னர் "அபிவிருத்தி பிரதேசம்" என குறிப்பிடப்படுகின்ற) பிரகடனப்படுத்தப்படலாம்.

(2) அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு இங்கு 6 ஆவது பந்தியில் (1) ஆவது உப பந்தியின்கீழ் மேற்கொள்ளப்படும் ஏதேனும் ஒரு கட்டளையின்படி அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட, அப்பிரதேசத்தின் எல்லைகள் குறிக்கப்பட்டு அப்பிரதேசமானது, பிரித்துக் காட்டப்படுதல் வேண்டும்.

(3) அபிவிருத்தி பிரதேசமொன்று பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்பு செயலாளரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் பெறப்பட்டால் தவிர, அரசாங்கத்தின் பிரதிநிதித்துவ தாபனம் ஒன்றாலோ வேறு யாராலுமோ, தேசிய பெருந்தெருக்களில் அல்லது தேசிய பெருந்தெருக்களில் அமையப் பெற்றுள்ள பாலங்கள் மற்றும் இறங்கு துறைகள் தவிர்ந்த ஏதேனும் வீதி அபிவிருத்தி பணி நடவடிக்கைகளை அமுல்படுத்தப்படுதல் அல்லது அமுல்படுத்தப்படுவதற்கு வழிவகுத்தல் என்பன மேற்கொள்ளலாகாது.

(4) இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு தேவைப்படுகின்ற கருமங்கள் மற்றும் கடமைகள் மேற்கொள்வது தொடர்பில் அமைச்சரால் காலத்துக்கு காலம் செயலாளருக்கு பொதுவான அல்லது விசேட கட்டளைகள் வழங்கப்படலாமென்பதுடன், செயலாளரினால் அக்கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் இதன் கருமங்கள் ஒழுங்கான முறையில் அமுல்படுத்தப்படுகின்றதா என்பன போன்ற விடயங்கள் ஆய்வு செய்தல் அமைச்சரினது பொறுப்பாகும்.

(6) மேற்சொல்லப்பட்ட அதிகாரங்களுக்கு மேலாக, அமைச்சருக்கு பின்வரும் அதிகாரங்களும் இருத்தல் வேண்டும். பணிப்பாளரின் சிபாரிசு கிடைக்கப்பெற்றதன் பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளைகளின் மூலம் :-

(அ) ஏதேனும் திட்டமிடப்பட்ட வீதியொன்று, தோட்ட வீதியொன்று கால்வாய் வழி அல்லது ஆற்றுப்பகுதி ஒன்று மாகாண வீதியாக பிரகடனப்படுத்தப்படுதல் ;

(ஆ) ஏதேனும் மாகாண வீதியொன்றின் பயன்பாடு தொடர்பில் அதன் கட்டுப்பாட்டினை ஒழுங்குபடுத்தலுக்காக தகுந்த கட்டளைகளையும் ஏற்பாடுகளையும் பிரகடனப்படுத்துதல் ;

(இ) ஏதேனும் தற்போதைய வீதியொன்றை அல்லது கால்வாய் வழியொன்றை நிறுத்தப்படுமாறு, வேறு பக்கத்துக்கு திருப்பப்படுமாறு அல்லது அனுப்புமாறு கட்டளையிடல் ;

(ஈ) கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் எல்லைகளுக்குள் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதனை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்காக தகுந்த விதிகளை நடைமுறைப்படுத்தப்படல்.

(உ) இந்நியதிச்சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்தும் கருமங்களுக்காக கட்டளைகளை அமுல்படுத்தல் ;

(ஊ) இந்நியதிச்சட்டத்தின் கருமங்கள் மற்றும் கடமைகள் மேற்கொள்ளப்படுவதற்காக ஏதேனும் குறித்த பிரதேசமொன்று பிரதேச பொறியியலாளர் பிரிவாக பிரகடனப்படுத்தப்படல்.

செயலாளரினது அதிகாரங்கள் கருமங்கள் மற்றும் கடமைகள்.

7. (1) 6 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, மாகாணத்தின் ஏதேனும் அபிவிருத்தி பிரதேசமொன்றினுள், செயலாளர் கொண்டுள்ள அதிகாரங்களும், கருமங்களும், கடமைகளும் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு அமையும் :-

(அ) அமைச்சரினால் செயலாளருக்கு காலத்துக்கு காலம் வழங்கப்படக்கூடிய கட்டளைகளின் கீழ் அப்பிரதேசத்தின் ஒருங்கிணைந்த வீதித்திட்டங்களை வகுத்தல், வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுதல், மூலதன முதலீட்டு திட்டங்களை தயாரித்தல், வீதி அபிவிருத்தி கருத்திட்டங்களை திட்டமிடுதல்.

(ஆ) அமைச்சரினால் செயலாளருக்கு காலத்துக்கு காலம் வழங்கப்படக்கூடிய கட்டளைகளின் கீழ் அப்பிரதேசத்துக்காக தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த வீதித் திட்டங்கள், வீதி அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள், வீதி அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் மூலதன முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுமதியளித்தல்.

(இ) அமைச்சரினால் செயலாளருக்கு காலத்துக்கு காலம் வழங்கப்படக்கூடிய கட்டளைகளின் கீழ், அப்பிரதேசத்துக்காக தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த வீதித் திட்டங்கள், வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், வீதி அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் மூலதன முதலீட்டுத் திட்டங்களை அமுல்படுத்துதல் அல்லது அமுல்படுத்துவதனை நிறுத்தி வைத்தல் அல்லது அமுல்படுத்துவதனை இரத்துச் செய்தல்.

(ஈ) ஏதேனும் வீதி அபிவிருத்தி திட்டமொன்றை மேற்கொள்ளும் கருமங்களுக்காக தேவைப்படுகின்ற சகல ஒப்பந்தங்களுக்கும் அல்லது உடன்பாடுகளுக்கும் இலங்கையினுள் யாதேனும் நபருடனோ, ஆள் சபையுடனோ, கூட்டுத்தாபனமொன்றுடனோ கூட்டுமுயற்சியாக பிரவேசித்தல் பூர்த்தி செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.

(உ) ஏதேனும் அனுமதிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி திட்டமொன்று அல்லது யோசனை திட்டமொன்றை பூரணப்படுத்துவதனை மேற்கொள்ளத் தவறிய ஏதேனும் ஒரு நபர், ஆள் சபை அல்லது கூட்டுத்தாபனமொன்றுக்காக முன்னின்று, அத்திட்டத்தினை அல்லது யோசனை திட்டத்தினை பூரணப்படுத்துவதற்காக பொறுப்பேற்றல்.

(ஊ) இந்நியதிச்சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களுக்காக ஏதேனும் அசையா அல்லது அசையும் சொத்துக்களை கைப்பற்றப்படல், அல்லது ஏற்கப்பட்ட அசையா அல்லது அசையும் சொத்துக்களை வெளியேற்றுதல்.

(எ) அரசாங்கத்தின் ஏதேனும் பிரதிநிதித்துவ தாபனமொன்றுக்காக வீதி அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் திட்டமிடல் யோசனை திட்டங்களை அப்பிரதிநிதித்துவ தாபனத்தின் கோரிக்கையின் பிரகாரம் தயாரித்தல் மற்றும் அத்திட்டங்களுக்கு அல்லது யோசனை திட்டங்களுக்கு இணைப்பினை மேற்கொள்ளுதல் அல்லது அதனை அமுல்படுத்தும் நோக்கத்துக்காக உதவியளித்தல்.

(ஏ) அரசாங்க பிரதிநிதித்துவ தாபனங்களின் அல்லது வேறு நபரொருவரின் நன்மைக்காக வீதித்திட்டங்களை வகுத்தல் அல்லது நிர்மாணச்சேவைகளை வழங்குதல்.

(ஐ) ஏதேனும் வழங்கப்படும் சேவைகளுக்காக கட்டணங்களை நிர்ணயம் செய்தல்.

(ஒ) பணத்தில் அல்லது வேறு வகையில் கிடைக்கப்பெறும் பரிசுகள், வழங்குதல், நன்கொடைகள், உதவிகள் என்பவற்றை பொறுப்பேற்று, அவற்றினை இந்நியதிச்சட்டத்தின் கருமங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உபயோகித்தல்.

(ஓ) இந்நியதிச்சட்டத்தின் கீழ் செயலாளர் கொண்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் கருமமாற்றல் தொடர்பாக அல்லது அதனோடு தொடர்புடைய மற்றும் இடைநேர்விளைவான சகல செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

(2) 7 ஆம் பந்தியின் 1 ஆவது உப பந்தியின் கீழ் செயலாளரினால் இதனின் அதிகாரங்களை அமுல்படுத்துகையில், கருமங்களை மற்றும் கடமைகளை மேற்கொள்கையில், ஏதேனும் அபிவிருத்தி பிரதேசமொன்றினுள் வீதிகளை திட்டமிடலுக்கு அல்லது வீதி அபிவிருத்திக்கு அமைவான ஏதேனும் நிகழ்ச்சித்திட்டமொன்றை அல்லது அபிவிருத்தி நடவடிக்கையொன்று தயாரிக்கப்படும் போது அல்லது அமுல்படுத்தும் போது, ஏதேனும் உள்ளூராட்சி பிரதேசமொன்று அவ் அபிவிருத்தி பிரதேசத்திற்கு உட்படுமாயின் அல்லது அதன் மேல் விரிவுபட்டிருக்குமாயின் அக்குறித்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய கூட்டத்துக்கு அல்லது கூட்டங்களுக்கு சமூகம் தருமாறு சந்தர்ப்பத்துக்கேற்றாற்போல் அவ்வுள்ளூராட்சி தாபனத்தின் நகர முதல்வருக்கு அல்லது தலைவருக்கு மற்றும் அவ் உள்ளூராட்சி தாபனத்தின் உத்தியோகத்தரொருவருக்கு அழைப்பு விடுத்தல் செயலாளரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வகையான அழைப்பினை பெற்ற நகர முதல்வர் அல்லது தலைவர் அல்லது உத்தியோகத்தர் அக்குறித்த கூட்டத்தில் அல்லது கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

(3) செயலாளரினால் இப்பந்தியின் கீழமைந்த அதிகாரங்கள் கருமங்கள் மற்றும் கடமைகள் ஏதேனும் உள்ளூராட்சி தாபனமொன்றின் நகர முதல்வருக்கு அல்லது வேறொரு உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் வழங்கப்படலாம்.

8. (1) இந்நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிர்வகித்தல் தொடர்பாக செயலாளருக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களை, செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட அளவின் பிரகாரம் பகிரப்பட்டவற்றை வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளரால் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்

(2) இந்நியதிச்சட்டத்தின் நிர்வகித்தலுக்காக இதனகத்துப்பின்னர் மாகாணமென அறிமுகப்படுத்தப்படும் "ஊவா மாகாணம்" முழுமையாக உள்வாங்கப்பட்டு, பிரதேச பொறியியலாளர் பிரிவுகள் பிரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அப்பிரிவுகள் யாவும் உள்ளீர்க்கப்படும் விதத்தில் பிரதான பொறியியலாளர்களும் பிரதேச பொறியியலாளர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) வீதிப்பணிப்பாளரின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ், மாகாணத்தினுள் இந்நியதிச்சட்டத்தினை நிர்வகித்தல் தொடர்பாக பிரதான பொறியியலாளர்கள் மற்றும் பிரதேசத்துக்கு பொறுப்பான பிரதேச பொறியியலாளர்கள் பொறுப்பளித்தல் வேண்டும்.

## III ஆம் பகுதி

### அதிகாரங்களை நடைமுறைப்படுத்தலும், பணிமுகாமைத்துவமும்

9. இந்நியதிச்சட்டத்தின் ஏதேனும் பணிகளுக்கு பொறுப்பாயிருக்கும் பிரதேசப் பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களால் சேவைக்கமர்த்தப்படும் ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் தேவைப்படுகின்ற எச்சந்தர்ப்பத்திலும், தேவையான ஆயுதங்கள், உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்கள் சகிதம் ஏதேனும் தற்போதிருக்கும் அல்லது உத்தேச வீதிக்கிணைவாக அல்லது அடுத்துக் காணப்படும் ஏதேனும் காணியொன்றினுள் அறிவித்து உட்பிரவேசிப்பது சட்டத்துக்கமைவானதாகும். காணியொன்றுக்கு உட்பிரவேசிக்கும் அதிகாரம்.

10. (1) பிரதேச பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் அவர்களால் சேவைக்கமர்த்தப்படும் ஊழியர்கள், தொழிலாளர் சகிதம் நியாயமான சந்தர்ப்பங்களில் மற்றும் தேவையான சகலதும் ஏற்புடையதுமான ஆயுதங்கள், உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்கள் ஏதேனும் தற்போதிருக்கும் அல்லது உத்தேச வீதியொன்றில் குறியிடல், அளத்தல், தயார்படுத்தல், வேலைச்செய்தல், திறத்தல், மாற்றியமைத்தல், திருப்புதல், பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல், வெளிச்சத்தை ஏற்படுத்துதல், விருத்திச்செய்தல், மூடுதல் அல்லது குறியிடுவதற்காக, அளத்தலுக்காக, தயார்படுத்தலுக்காக, வேலைச்செய்வதற்காக, திறப்பதற்காக, மாற்றியமைப்பதற்காக, வெளிச்சத்தை ஏற்படுத்துவதற்காக, விருத்திச்செய்வதற்காக அல்லது மூடுவதற்காக ஏதேனும் ஒரு வகையில் உதவியளித்தல் கருமங்களுக்காக அல்லது அதனுடன் அல்லது ஏதேனும் ஒரு வகையில் தொடர்புடைய ஏதேனும் பாலமொன்று, மதகொன்று, குளமொன்று, காணொன்று, வாங்கியொன்று அல்லது கிடங்கொன்றை நிர்மாணித்தல், தோண்டுதல், பழுதுபார்த்தல், திருப்புதல் அல்லது விருத்திச்செய்தல், கருமங்களுக்காக தண்ணீர், பலகைகள், தடைகள், கற்கள், மணல், களிமண், அல்லது வேறேதேனும் பொருளொன்றுக்காக ஆய்வு செய்தல், திருப்புதல், வெட்டுதல், நிர்மாணித்தல் அல்லது கொண்டு செல்லல், அல்லது மேற்சொல்லப்பட்ட ஏதேனும் உத்தியோகத்தரொருவரது அல்லது அவரின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனும் தொழிலாளியொருவரது, நபரொருவரது விலங்கொன்றினது, வண்டிகளின், உபகரணங்களின், வாகனங்களின் மற்றும் இயந்திரோபகரணங்களின் உபயோகத்திற்காக அவ்வாறான ஏதேனும் பெருந்தெருக்களில் தாபிக்கப்பட்டுள்ள அல்லது அதற்கண்மையில் தொடர்வீடுகள் அல்லது கட்டிடங்கள் ஏதேனும் நிர்மாணித்தல் அல்லது பழுதுபார்த்தல் கருமங்களுக்காக முறையற்ற வகையில் உட்பிரவேசிப்பவராக கவனத்திற் கொள்ளப்படா. அவ்வகையான ஏதேனும் பெருந்தெருக்களுக்கு அடுத்துள்ள அல்லது அருகில் அமைந்துள்ள காணியொன்றில் அத்தொழிலாளர்கள், நபர்கள் விலங்குகள், வண்டிகள், உபகரணங்கள், வாகனங்கள், மற்றும் இயந்திரோபகரணங்கள் என்பவற்றை யாரேனும் நபரொருவருக்கு,

ஆள்ச்சபையொன்றுக்கு அல்லது கூட்டுத்தாபனமொன்றுக்கு சொந்தமான காணியின் வழியே கொண்டு செல்லல், சட்டத்துக்கமைவானதாகும் :

அவ்வாறாயினும், போதுமான பொருட்கள் அருகாமையில் அமைந்துள்ள பாழடைந்த காணிகளின் அல்லது பொது அல்லது கைவிடப்பட்ட பூமியிலிருந்து எளிதாக பெற்றுக்கொள்ள முடியாத பட்சத்தில் தவிர அவ்வகையான ஏதேனும் பொருட்களுக்காக ஏதேனும் வாசலொன்று அல்லது வீடொன்றுக்கு செல்லும் பாதையொன்று, மைதானமொன்று, வயலொன்று அல்லது காடொன்று, அவ்வகையான ஏதேனும் உரிமையாளரின் விருப்பமின்றி திருப்புதல் வெட்டுதல், கொண்டு செல்லல், மேற்கொள்ளலாகாது. மேற்சொல்லப்பட்டவாறு போதுமான பொருட்களை பெற்றுக்கொள்ள முடியுமாயின் அவ்வகையில் அப்பொருட்களை எளிதாக பெற்றுக்கொள்ளக்கூடிய இடத்தினின்று அவ்வுத்தியோகத்தரால் அப்பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.

(2) அவ்வாறு பெறப்படும் சகல பொருட்களுக்காக மற்றும் அப்பொருட்களை பெற்றுக்கொள்ளும் போதும் அல்லது கொண்டு செல்லும் போது செய்யப்படும் நட்டங்களுக்காக அதன் உரிமையாளருக்கு நியாயமான நட்டயீட்டுத் தொகையொன்று செலுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் மென்மேலும், அவ்வகையான பொருட்கள் ஏதேனும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் அகழ்வுகள் அல்லது குழிகள் யாரேனும் நபரொருவருக்கு அல்லது விலங்கொன்றுக்கு ஆபத்தில்லா வகையில், அவ் உத்தியோகத்தவரால் சுற்றி வளைக்கப்படுதல் அல்லது வேலியமைக்கப்படுதல் வேண்டும்.

11. (1) பிரதேச பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களால் சேவைக்கமர்த்தப்படும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள், ஏதேனும் தற்போதைய அல்லது உத்தேச வீதியொன்றில் குறியிடும் போது, அளக்கும் போது, தயார்படுத்தும் போது, கருமமாற்றும் போது, திறக்கும் போது, மாற்றியமைக்கும் போது, திருப்பும் போது, பழுதுபார்க்கும் போது, வெளிச்சத்தை ஏற்படுத்தும் போது, விருத்திச்செய்யும் போது அல்லது அதன் மேல் அமைந்துள்ள மற்றும் ஏதேனுமொரு வகையில் அதனுடன் தொடர்புடைய ஏதேனும் பாலமொன்று, மதகொன்று, வேலியொன்று, காணொன்று, வாங்கியொன்று அல்லது அகழ்வொன்றை அமைக்கும் போது, தோண்டும் போது, பழுது பார்க்கும் போது, வெளிச்சத்தை ஏற்படுத்தும் போது, விருத்தி செய்யும் போது, அங்கு பணி நடவடிக்கைகளில் மேற்கொள்ளும் காலகட்டத்தில் அவ்வுத்தியோகத்தரது, ஊழியரது, தொழிலாளரது, விலங்கினது, வண்டிகளினது, ஆயுதங்களினது மற்றும் அவர்களால் ஈடுபடுத்தப்படும் உபகரணங்களின் மற்றும் ஆதனங்களின் உபயோகத்திற்காக அதற்கு அடுத்ததாக அல்லது அதற்கு அண்மையில் அமைந்துள்ள ஏதேனும் காணியொன்றில், தற்கால கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் ஏதேனும் காணிக்கு சமீபமாக அல்லது அடுத்ததாக அவர்களால் ஈடுபடுத்தப்படும் சகல விலங்கினங்களும் ஒழுங்கான முறையில் தரித்து நிறுத்திவைத்தல் சட்டப்படியானதாகும்:

அவ்வாறாயினும் பயிர்ச்செய்கைக்கு உட்பட்ட ஏதேனும் காணியொன்று அல்லது குறித்த நோக்கத்துக்காக அண்மையிலுள்ள பாழடைந்த காணி அல்லது பொது அல்லது கைவிடப்பட்ட பூமி இருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்வகையான கட்டிடங்கள் ஏதேனும் நிர்மாணித்தல் அல்லது விலங்கினங்கள் ஏதேனும் அடைத்து நிறுத்தி வைத்தலாகாது.

(02) மேலும், சகல சந்தர்ப்பங்களிலும் காணிக்கு செய்யப்பட்ட ஏதேனும் நட்டங்களுக்காக காணி உரிமையாளருக்கு நியாயமான நட்டயீடு செலுத்தப்படுதல் வேண்டும்.

*தற்காலிக குறுக்கு பாதைகள்.*

12. பிரதேச பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களால் சேவையிலமர்த்தப்படும் தொழிலாளர்களால் வீதியமைத்தல் பணி நடவடிக்கைகள் ஏதேனும் அமுல்படுத்தப்படும் காலகட்டத்தில் உபயோகத்திற்காக ஏதேனும் தகுந்த அடுத்தமைந்துள்ள அல்லது சமிபமாகவுள்ள காணி வழியே தற்காலிக குறுக்குப் பாதையொன்றை அமைத்தல் சட்டப்படியானதாகும். அவ்வாறாயினும் அவ்வகையான குறுக்குப் பாதையானது ஏதேனும் கட்டிடமொன்று அமைந்துள்ள காணியின் மேல் அல்லது தோட்டமொன்றில் அல்லது வாசலொன்றில் மேல் அமைத்தலாகாது.

*வீதிக்கு அண்மையில் செய்யப்படும் அகழ்வுகள்.*

13. பிரதேச பொறியியலாளர், தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் அவர்களால் சேவைக்கமர்த்தப்படும் தொழிலாளர்களால், தேவையென கருதப்படும் ஏதேனும் சூழ்நிலையில், ஏதேனும் வீதியொன்றின் ஓரத்தில் வேலிகள், கிடங்குகள், காண்கள், படுக்கைகள் மற்றும் குழிகள் அமைத்தல் அல்லது ஏற்படுத்துதல் மேற்கொள்ளப்படலாம். அவ்வேலிகளுக்கு, கிடங்குகளுக்கு, காண்களுக்கு, அல்லது படுக்கைகளுக்கு அடுத்தமைந்துள்ள காணிகளின் உரிமையாளர்கள் அல்லது வதிவுதாரர்களால் அவற்றினை பொருத்தமென கொள்ளும் விதத்தில் பழுதுபார்ப்புக்களை மேற்கொண்டு ஒழுங்குமுறையில் வைத்திருத்தல் வேண்டும் அவ்வாறு வைத்துக்கொள்ள அவர்களுக்கு இதனில் உத்தரவிடப்படுகின்றது.

*கிடங்குகள் மற்றும் காண்கள் அமைத்தலும் பராமரிப்பு செய்தலும்.*

14. பிரதேச பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களால் சேவைக்கமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு, சகல கிடங்குகள், காண்கள் அல்லது நீர்வீழ்ச்சிகளை ஏற்படுத்துவதற்கும், சுத்தப்படுத்துவதற்கும் மற்றும் திறந்து வைப்பதற்கும், ஏதேனும் வீதியொன்றுக்கு அல்லது கால்வாயொன்றுக்கு அடுத்துள்ள அல்லது சமீபமாக அமைந்துள்ள ஏதேனும் காணியொன்றின் மற்றும் காணியின் வழியே ஏதேனும் வீதியொன்றின் அல்லது கால்வாயொன்றின் பாதுகாப்பிற்காக வீதியொன்று அல்லது கால்வாயொன்று விருத்திச் செய்யப்படல் நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்புச் செய்தலுக்காக அவசியமென கருதப்படும் ஏதேனும் சுரங்கம் அல்லது பாலங்களை நிர்மாணிப்பதற்கும் மற்றும் தாபிப்பதற்கும் அதிகாரமுள்ளது.

15. பிரதேச பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தவர் மற்றும் அவர்களால் சேவையிலமர்த்தப்படும் தொழிலாளர்களால், ஏதேனும் வீதியொன்றின் அல்லது வீதியின் மேல் வளர்ந்துள்ள அல்லது ஏதேனும் தடையையேற்படுத்தும் அல்லது ஆபத்தையேற்படுத்தும் சகலவிதமான மரங்கள், புதர்கள் மற்றும் மரங்களின் இலைகள் அல்லது கிளைகள் அல்லது வேர்களை வெட்டுதல், அகற்றுதல் மற்றும் ஏதேனும் அடுத்துள்ள அல்லது சமீபத்திலுள்ள காணியில் போடுதல் மற்றும் அக்கருமங்களுக்காக தேவைப்படுகின்றவாறு யாரேனும் நபர்கள், விலங்கினங்கள் மற்றும் உபகரணங்கள் சகிதம் ஏதேனும் காணியொன்றுக்கு அல்லது பகுதிக்கு பிரவேசித்தல் மற்றும் அம்மரங்கள், புதர்கள், இலைகள், கிளைகள், வேர்கள் வெட்டுதல், சீவுதல் அல்லது அகற்றுதலுக்காக தேவைப்படுகின்ற சகலவற்றையும் அங்கு மேற்கொள்ளலானது சட்டத்துக்கமைவானதாகும். மரங்களை வெட்டுதலும் அகற்றுதலும்.

16. பிரதேச பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் அவர்களால் சேவைக்கமர்த்தப்படும் தொழிலாளர்கள் ஒப்பந்தங்களுக்கு உட்பட்ட ஒப்பந்தக்காரர்களால், அப்பழுதுபார்ப்பு நடவடிக்கைகளை எளிதுபடுத்துவதற்காக அல்லது அண்மையில் பழுதுபார்ப்புச் செய்யப்பட்ட வீதியொன்றுக்கு நட்டங்களை ஏற்படுத்துவதனை தவிர்த்தலுக்காக தேவைப்படுகின்றவாறு ஏதேனும் வீதியொன்றின் மேல் கற்கள். மணல் மற்றும் வேறு ஏதேனும் கட்டிடப்பொருட்கள் வாகனங்கள், அல்லது இயந்திரோபகரணங்களை சேர்த்து வைத்தல், நிர்மாணித்தல் மற்றும் அவ்வீதிகளில் திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு மற்றும் திருத்தப்பணிகள் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்பு சில காலத்துக்காக அவற்றினை வைத்திருத்தலுக்காக இடமளிக்கலாம் அவ்வீதியில் பயணிக்கும் நபரொருவருக்கு அல்லது பயணிக்கும் வாகனமொன்றுக்கு அபாயம் அல்லது நட்டமொன்று ஏற்படுதலை தவித்தலின் பொருட்டு, உத்தியோகத்தரொருவரால் தகுந்த முன் ஒழுங்குகளை மேற்கொள்ளல் வேண்டும். வீதி நிர்மாணிப்பு பொருட்களை வைத்திருத்தல்.

17. வீதி நிர்மாணப் பணி நடவடிக்கைகள் ஏதேனும் மேற்கொள்ளப்படும் இடைநடுவே பயன்பாட்டுக்காக தேவைப்படக்கூடிய, மண் அல்லது வேறு பொருட்கள், ஏதேனும் அடுத்ததாக அல்லது சமீபத்தில் காணப்படுகின்ற காணியொன்றில், பிரதேச பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களால் சேவைக்கமர்த்தப்படும் தொழிலாளர்களால், போடுதல் சட்டப்படியானதாகும். காணிகளில் நிர்மாணிப்பு பொருட்களை வைத்திருத்தல்.

18. ஏதேனும் தற்போதைய அல்லது உத்தேச வீதியொன்றினை குறியிடும், அளக்கும், தயார்படுத்தும், வேலைசெய்யும், திறந்து வைக்கும், மாற்றியமைக்கும், திருப்பப்படும், பழுதுபார்க்கப்படும் வெளிச்சத்தை ஏற்படுத்தும், விருத்திசெய்யப்படும் இடைநடுவே அல்லது அதன் மேல் அமையப்பெற்ற அல்லது அவ்வாறான விதத்தில் தொடர்புடைய ஏதேனும் பாலமொன்று, குளமொன்று காணொன்று, வாங்கியொன்று, கிடங்கொன்றை தோண்டும், திருத்தங்களை மேற்கொள்ளும், வெளிச்சத்தையேற்படுத்தும், அல்லது பழுதுபார்ப்புக்களை மேற்கொள்ளும் இடைநடுவே அவ்வாறான யாதேனுமொரு உத்தியோகத்தரால் அல்லது அவர்களால் சேவைக்கமர்த்தப்படும் யாரேனுமொரு தொழிலாளியால், அவ்வகையான ஏதேனும் வேலைத்தளமொன்றை அகற்றுவதற்கு தேவைப்படுகின்ற சகல மண் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்களை அதற்கு அடுத்ததாக அல்லது சமீபத்தில் அமைந்துள்ள காணியொன்றில் சேர்த்தல் சட்டத்துக்கமைவானதாகும் : ஏதேனும் காணியொன்றில் கழிவு பொருட்களை சேர்த்தல்.

அவ்வாறாயினும் இப்பந்தியின் கீழ் அகற்றப்படும் மண் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்கள் அடுத்துள்ள அல்லது அண்மையில் காணப்படும் காணியில் சேர்க்கப்பட்டதாயின் நியாயமான கால எல்லையினுள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டு ஒழுங்காக பராமரிக்கக்கூடிய வகையில் தயார்படுத்திக்கொடுக்கும் பொறுப்பு உரிய சேவையில் ஈடுபட்டோரின் பொறுப்பாகும்.

19. வேறேதேனும் சட்டமொன்றின் கீழ் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள அல்லது காலத்துக்காலம் விதிக்கப்படுகின்ற விதிகளினதும் கட்டளைகளினதும் கீழ் வீதி நிர்மாண பணி நடவடிக்கைகளுக்காக தேவைப்படுகின்ற வெடிபொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கும், வழங்குனர்களிடமிருந்து வேலைத்தளத்துக்கு கொண்டு செல்லவும், பிரதேச பொறியியலாளருக்கு, அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள யாரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அதிகாரமுள்ளது. வெடிபொருட்களை களஞ்சியப்படுத்தல் கொண்டு செல்லல், கருமங்களுக்காக உரிய அதிகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரம் அவர்களிடம் இருத்தல் வேண்டும். அவ்வெடி பொருட்களை களஞ்சியப்படுத்தலுக்காக பாதுகாப்பறை ; அல்லது வெடிபொருட்களை களஞ்சியப்படுத்துதலும் பயன்படுத்துதலும்.

20. (1) இந்நியதிச் சட்டத்துக்குரிய கருமங்களுக்கு பொறுப்பாகவிருக்கும் உத்தியோகத்தரொருவருக்கு வேறேதேனும் நியதிச்சட்டமொன்றில் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்கள் அல்லது தத்துவங்களை அமுல்படுத்துவதன் காரணத்தில் ஏதேனும் நட்டம் அல்லது இழப்பொன்றை தாங்கிக்கொள்ள வேண்டியேற்படும் சகல நபர்களுக்கும், அதற்காக நட்டயீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு உரிமையுள்ளது. அவ்வாறாயினும், அந்நட்டம் ஏற்பட்டதாக கூறப்படும் ஏதேனும் செயல், காரணம் அல்லது விடயம் தொடர்பிலும் அச்செயல் காரணம் அல்லது விடயம் மூன்று மாதங்கள் பூர்த்தியாவதற்கு முன்பு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அதற்காக பிரதேச பொறியியலாளருக்கு கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மேற்சொல்லப்பட்ட அக்காலக்கட்டத்தினுள் அக்கோரிக்கை சமர்ப்பித்தலானது தவிர்க்கப்படுமாயின் குறித்த அந்நட்டத்துக்காக நட்டயீட்டினை பெற்றுக்கொள்ளும் பொருட்டான அக்கோரிக்கைக்கு இடமளிக்கப்படாது. அதன்பின்னர் அந்நட்டயீட்டினை அறவிட்டுக்கொள்வதற்கு கோரிக்கையாளருக்குள்ள உரிமை இல்லாமல் போய்விடும். நட்டங்களுக்கான நட்டயீட்டு செலுத்தல்கள்.

(2) மேற்குறிப்பிடப்பட்டுள்ள அக்காலக்கட்டத்தினுள் கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்குமாயின், நட்டயீட்டின் அளவு தொடர்பாக உடன்பாடொன்றுக்கு வர முடியாதாயின் அந்நட்டயீட்டின் அளவு, பணிப்பாளரால் பெயர்

குறிப்பிடப்படுகின்ற ஒரு தீர்ப்பவரினாலும் மற்றும் நட்டயீட்டினை கோரும் நபரால் பெயர் குறிக்கப்படும் மற்றுமொரு தீர்ப்பவரொருவரினாலும் தீர்மானிக்கப்படலாம். தீர்ப்பவர்கள் இருவருக்கும் உடன்பாடொன்றுக்கு வரவியலாத பட்சத்தில், செயலாளரினால் தீர்ப்பாளியொருவர் நியமிக்கப்படலாமென்பதுடன், குழாத்தினரால் இணங்கப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் தீர்ப்பாளர்கள் அல்லது தீர்ப்பாளியினால் வழங்கப்படும் தீர்ப்பு, இறுதியானதாகும்.

## *IV* ஆம் பகுதி

### வீதிப்பணி விடயத்தில் தடைகளை வரையறை செய்தலும் கட்டுப்படுத்தலும்

*பணிகளுக்கு தடைகளை ஏற்படுத்துதல்.*

21. பிரதேச பொறியியலாளரினது கட்டளை மற்றும் அதிகாரத்தின்கீழ் ஈடுபட்டுள்ள யாரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அல்லது தொழிலாளியொருவருக்கு தடைகளை ஏற்படுத்தும், இடஞ்சல்களை ஏற்படுத்தும், பயமுறுத்தல்களையேற்படுத்தும், அல்லது தாக்குதலை மேற்கொள்ளும் யாரேனும் நபரொருவர் இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றத்துக்கு குற்றவாளியாக காணப்படுவாரென்பதுடன், இது தொடர்பில் நீதிபதியொருவரினால் குற்றவாளியாக்கப்படும் போது குற்றத்தின் கடும் தன்மை மற்றும் குற்றத்தின் தன்மைக்கேற்ப ரூபா ஐயாயிரத்துக்கு குறையாத பத்தாயிரத்துக்கு மேற்படாத தண்டமொன்று அல்லது 6 மாதத்துக்கு குறையாத ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறை தண்டனை அல்லது இவ்விரு முறையிலுமான தண்டனைக்குட்படுதல் வேண்டும்.

*ஏனைய தாபனங்களின் பணிகள் தொடர்பில் தரம் நிர்ணயிக்கப்படுதல் மற்றும் மேற்பார்வை.*

22. (1) மாகாண சபைக்குரித்தான ஏதேனும் மாகாண வீதியொன்றினை நிர்மாணித்தல், பராமரித்தல், அபிவிருத்திசெய்தல், ஏதேனும் கூட்டுத்தாபனமொன்றுக்கு, கம்பனியொன்றுக்கு, தோட்ட அதிகாரமொன்றுக்கு, பிரதேச சபையொன்றுக்கு, அரசாங்கத்தினால் அத்தாபனங்களுக்கு அல்லது நபருக்கு, செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை உபயோகத்திற்கொண்டு, அக்கூட்டுத்தாபனம், கம்பனி, தோட்ட அதிகாரம், பிரதேச சபை என்பவற்றால் மேற்கொள்ளப்படும் அப்பணி நடவடிக்கைகள் வீதிப்பணிப்பாளரின் மேற்பார்வைக்கு உட்படுகையில் அத்தாபனம் அல்லது நபரினால் பேணப்படவேண்டிய குறைந்ததரம் வீதிப் பணிப்பாளரினால் நிர்ணயிக்கப்படுதலானது சட்டபடியானதாகும்.

(2) அவ்வீதியினை அளத்தல், குறியீடுதல் அல்லது பரிசோதனை கருமங்களுக்காக வீதிப்பணிப்பாளர் அல்லது பிரதானப்பொருளியியலாளர் அல்லது பிரதேசப்பொறியியலாளர் அல்லது வீதிப்பணிப்பாளர் அல்லது வீதிப்பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள யாரேனும் உத்தியோகத்தரொருவரினால் தொழிலாளிகள், ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் சகிதம் யாரேனும் அண்மையிலுள்ள காணிக்கு அல்லது வேலைத்தளத்துக்கு உட்பிரவேசித்தல் சட்டத்துக்கமைவானதாகும்.

*வீதி உபயோக விடயத்தின் எல்லைகள்.*

23. மாகாண வீதிப்பணிப்பாளரினால் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும் அறிவிப்பொன்றின் மூலம், பிரதேச பொறியிலாளரினால் ஏதேனும் வீதியொன்று, காணியொன்று அல்லது அதற்கு அடுத்துள்ள கட்டிடமொன்றை உபயோகிப்பது தொடர்பில் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற யாதேனுமொரு காரணம் தொடர்பாக எல்லைகள் நிர்ணயிக்கப்படுவது சட்டத்துக்கமைவானதாகும் :-

(1) மாகாண வீதியொன்றில் ஏதேனுமொரு பிரவேசிக்கும் பாதையொன்றை நிர்மாணித்தல் அமைத்தல் அல்லது ஏற்படுத்துதல்.

(2) பிரவேசிக்கும் வீதிகளின் எண்ணிக்கை அதிகரிக்க ஏதேனும் விதத்தில் ஏதேனுமொரு காணியொன்றை ஒதுக்கிக்கொடுத்தல்.

(3) ஏதேனும் கட்டிடமொன்றை நிர்மாணித்தல், ஏதேனும் கட்டிடமொன்று, கடைத்தொகுதியொன்றாக அல்லது வணிக நிலையமாக உபயோகித்தல், ஏதேனும் வீதியொன்றின் நடுவிலிருந்து ஏதேனும் நிச்சயிக்கப்பட்ட தூரத்தின் அளவிற்குள் பெயர்ப்பலகை தாபித்தல் அல்லது நிர்மாணித்தல்.

(4) ஏதேனும் வீதியொன்றில், ஏதேனும் குறித்த பகுதியொன்றின் வழியாக நடந்து செல்லல் அல்லது மாடுகளை கொண்டு செல்லல்.

(5) வீதியில் ஏதேனும் நிச்சயிக்கப்பட்ட போக்குவரத்து நடைமுறையினை பயன்படுத்தல்.

(6) ஏதேனும் வீதியொன்றில், ஏதேனும் இயந்திரோபகரணங்கள் செலுத்தப்படுதல்.

(7) ஏதேனும் வீதியொன்றில் அல்லது ஏதேனும் திசையொன்றின் வழியாக வாகன போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் வீதியினை பயன்படுத்துதல்.

மேற்குறித்த காரணங்கள் தொடர்பில் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகள் ஏதேனையும் மீறுமொரு நபர், குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்படுவதுடன், அக்குற்றம் தொடர்பில் நீதிபதியால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்பு ரூபா ஐயாயிரத்துக்கு மேற்படாத தண்டமொன்றுக்கு உட்படுதல் வேண்டும்.

*பிரவேச வீதிகளை பெற்றுக்கொடுத்தல்.*

24. (1) பிரதேச பொறியியலாளரின் எழுத்து மூல முன் அனுமதியின்று, ஏதேனும் வீதியொன்றுக்கு, அல்லது ஏதேனும் வீதியொன்றிலிருந்து எவ்வகைத்தன்மையையும் கொண்ட பிரவேச வீதியொன்றினை நிர்மாணித்தலுக்கு அல்லது ஏற்படுத்துவதற்கு, இந்நியதிச்சட்டத்தின் கீழ் எவருக்கும் அனுமதி கிடைத்தலாகாது. யாரேனும் நபரொருவருக்கு விதியிலிருந்து ஏதேனும் பிரவேச வீதியொன்றின் வசதி தேவைப்படுமாயின், அவரால் இதற்காக மேற்சொல்லப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அனுமதி பெறுதல் வேண்டும். பிரதேச பொறியியலாளரால் அவ்விடம் பரிசோதிக்கப்பட்டு, உரியவருக்கு தகுந்த அறிவுரை வழங்கப்படுதல் வேண்டும்.

(2) அனுமதியளிக்கப்பட்ட அப்பிரவேச வீதி, கொங்கிறீட் மதகொன்றாக, பாலமொன்றாக, மேடையொன்றாக அல்லது ஏதேனும் வில்வலைவாக இருக்கலாம். நிர்மாணிக்கப்பட்ட மதகின் திறப்பு குறுக்குவாக்கில் அமைந்த விதியினளவு மற்றும் பிரவேச வீதியின் அகலம் போன்றவற்றை பிரதேச செயலாளரினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(3) நிர்மாணித்தலுக்கான அனுமதியினை வழங்கும் நபரினால், வீதியில் அமையப்பெற்றுள்ள பக்கக் காண்களுக்கு இடையூறுகள் ஏற்படவில்லையென அல்லது தண்ணீர் வழிந்தோடலுக்கு எவ்விதத்திலும் தடையேற்படவில்லையெனவும் பொறுப்பேற்றல் வேண்டும். பிரவேச வீதியொன்றினை நிர்மாணித்தலின் பெறுபேறாக, நீர்பெருக்கிற்கு எண்ணெய் அல்லது மழை நீர் கலப்பதற்கு அல்லது சேர்வதற்கு இடமளித்தலாகாதென்பதுடன், பிரவேச வீதியினுள்ளே ஏதேனும் கற்கள், மணல்கள், மண் அல்லது வேறு கழிவுப்பொருட்கள் கலத்தல் அல்லது சேருதலுக்கு இடமளிக்கலாகாது.

(4) ஏதேனும் பிரவேச வீதியொன்றினை நிர்மாணித்தலின்போது வீதிக்குச்செய்யப்படும் நட்டங்களுக்காக பிரவேச பொறியியலாளரால் தொகையொன்றினை அறவிட்டுக்கொள்ளுதல் சட்டத்துக்கமைவானதாகும். ஏதேனும் பிரதேச வீதியொன்றின் நிர்மாணித்தலுக்கான முழுச்செலவும், உரியவரினால் தாங்கிக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) இக்கட்டளைகள் எதனையும் மீறும் யாரேனும் நபரொருவர் அல்லது தாபனமொன்றுக்கு, இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றத்துக்கு குற்றவாளியாகுவதுடன், இக்குற்றம் தொடர்பில் நீதிபதியொருவரால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்பு ரூபா ஐயாயிரத்துக்கு மேற்படாத தண்டமொன்றுக்கு உட்படுதல் வேண்டும்.

*பிரயோசன சேவைகளுக்காக அனுமதியளித்தல்.*

25. (1) பிரயோசன சேவைகளுக்குரிய ஏதேனும் சட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்ட) வீதியின் அடியில் அல்லது மேற்பகுதியில் அல்லது சமீபமாக மக்கள் சேவைகளை வழங்கும் திட்டமொன்றை தாபித்தல் கருமங்களுக்காக (இதனகத்துப்பின்னர் "பிரயோசன சேவை வழங்குனர்கள்") யாரேனும் நபரொருவருடன், கூட்டுத்தாபனமொன்றுடன், கம்பனியொன்றுடன், பிரதேச அதிகாரச் சபையொன்றுடன் அல்லது திணைக்களமொன்றுடன் பிரதேச பொறியியலாளர் ஒப்பந்தங்களுக்கு உட்படலாம்.

(2) ஏதேனும் வீதியொன்றின் அடியில், மேல், அல்லது அருகாமையில், அவ்வகையான மக்கள் சேவையொன்றினை ஏற்படுத்துவதற்கு கோரிக்கை விடுக்கும் பட்சத்தில், வீதியினை தோன்றும் ஆழம், அகலம், நிர்மாணிக்குமிடம், நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு உத்தேசித்துள்ள திகதி, நிர்மாணக்காலம், பயன்படுத்தப்படும் இயந்திரோபகரணங்கள் தொடர்பாக முழுவிபரம் என்பன பிரயோசன சேவை வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) விபரமளிக்கப்பட்டுள்ளவாறு யோசனைகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் பிரயோசன சேவை வழங்குனர்களால் அந்நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்கையில் வீதியினை மீண்டும் நிர்மாணிப்பதற்காக அல்லது வீதிக்கு ஏற்பட்ட நட்டத்தின் பழுதுபார்ப்புக்காக தாங்கப்படும் செலவினை பிரதேச பொறியிலாளர், மதிப்பிடுதல் வேண்டும். பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக அம்மதிப்பீட்டுத் தொகையினை பிரயோசன சேவை வழங்குனரால் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், அத்தருணத்தில் பிரதேச பொறியியலாளர் ஒப்பந்தமொன்றுக்கு உட்பட்டு அந்நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளுவதற்கான எழுத்துமூல அனுமதியினை வழங்குதல் வேண்டும்.

(4) பிரயோசன சேவை வழங்குனர்களால் வீதிக்குத் தடங்கள் மற்றும் இடையூறுகள் ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில் பிரதேசப் பொறியியலாளர் திருப்தி கொள்ளும் வகையில் அத்தடைகளை அகற்றுமாறு, சேவை வழங்குனர்களுக்கு பிரதேச பொறியியலாளரால் அறிவிப்பொன்று செய்யும் சந்தர்ப்பத்தில், பிரயோசன சேவை வழங்குனர்களால் அக்கட்டளை தவிர்க்கப்படுமாயின் அல்லது அதற்காக வேறு பிரயோசன சேவை வழங்குனரொருவரை தேடிக்கொள்ள முடியாது போய்விடுமாயின், பிரதேச பொறியியலாளரினால் அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு அப்பணிகளுக்கு தாங்கப்பட்ட செலவினை ஆரம்ப பிரயோசன சேவை வழங்குனரிடமிருந்து அறவிட்டுக்கொள்வது சட்டத்துக்கமைவானதாகும்.

(5) யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆழம், அகலம், இடம் மற்றும் சூழல், தொடர்பான, எல்லைகளை பிரயோசன சேவை வழங்குனர்கள் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். இதனின் போது ஏதேனும் மாற்றங்கள் தேவையென கருதுமிடத்து இது தொடர்பில் பிரயோசன சேவை வழங்குனர்களால் உடனடியாக பிரதேச பொறியியலாளருக்கு அறிவித்து,

இது சம்பந்தமாக ஏற்ற தீர்மானமொன்றை மேற்கொள்வதோடு, ஏதேனும் மேலதிக தொகையொன்றினை செலுத்த வேண்மாயின் அதனை எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(6) பிரதேச பொறியியலாளரின் எழுத்து மூல அனுமதி இன்றி பிரயோசன சேவை வழங்குனர்களால் ஆழம், அகலம், இடம் மற்றும் சூழல் தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தலாகாது.

(7) பிரயோசன சேவை வழங்குனர்கள் வீதியில் ஏதேனும் வேலையொன்றை மேற்கொள்கையில், மக்கள் பிரயோசன சேவை கட்டமைப்புக்கு ஏற்படுத்திய ஏதேனும் நட்டத்துக்காக பிரதேச பொறியியலாளர்கள், அல்லது அவரது உத்தியோகத்தர்கள் அல்லது தொழிலாளர்கள் பொறுப்புக் கூறத்தேவையில்லை.

கட்டிட நிர்மாண வரம்புகள் மற்றும் பார வரம்புகள்.

26. (1) மாகாண சபைக்கு உரித்தான வீதிகள் தொடர்பில் கட்டிடங்கள் நிர்மாணிக்கும் எல்லைகள், பார எல்லைகள் என்பன கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காணப்படும் :-

(I) வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் "சீ" வகுப்பு வீதியென அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்ட வீதியொன்று தொடர்பிலாயின், வீதியின் மத்திய ரேகையிலிருந்து வீதியின் இருபக்கத்துக்கும் தலா 07 (ஏழு) மீற்றர் கட்டிட நிர்மாண வரம்பாகுவதுடன், பொருட்கள் அல்லது ஆட்கள், மற்றும் விலங்கினங்கள் உட்பட ஏற்றப்பட்ட நிறை அத்துடன் வாகனத்தின் நிறை சகிதம் மொத்த நிறை 12 மெற்றிக்டொன்களுக்கு மேற்படாதவாறு வீதிக்கு, வீதி ஏற்றவாறு வேறுவேறாக பணிப்பாளரால் தீர்மானிக்கப்பட்டு அவரால் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

(II) வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் "டீ" வகுப்பு வீதியென அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்ட வீதியொன்று தொடர்பிலாயின், வீதியின் மத்திய ரேகையிலிருந்து வீதியின் இருபக்கத்துக்கும் தலா 7 மீற்றர் கட்டிட நிர்மாண வரம்பாகுவதுடன், ஏற்றப்பட்ட நிறை அத்துடன் வாகனத்தின் நிறை சகிதம் மொத்த நிறை 10 மெற்றிக்டொன்களுக்கு மேற்படாதவாறு வீதிக்கு, வீதி ஏற்றவாறு வேறுவேறாக பணிப்பாளரால் தீர்மானிக்கப்பட்டு அவரால் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

(III) வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் "ஈ" வகுப்பு வீதியென அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்ட வீதியொன்று தொடர்பிலாயின், வீதியின் மத்திய ரேகையிலிருந்து வீதியின் இருபக்கத்துக்கும் தலா 5 மீற்றர் கட்டிட நிர்மாண வரம்பாகுவதுடன், ஏற்றப்பட்ட நிறை அத்துடன் வாகனத்தின் நிறை சகிதம் மொத்த நிறை 8 மெற்றிக்டொன்களுக்கு மேற்படாதவாறு வீதிக்கு, வீதி ஏற்றவாறு வேறுவேறாக பணிப்பாளரால் தீர்மானிக்கப்பட்டு அவரால் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

(2) கட்டிட நிர்மாண உரிய வரம்பினுள் யாரேனும் நபரொருவரால் ஏதேனும் காணியொன்றில் ஏதேனும் கட்டிடமொன்று, எல்லை மதிலொன்று அல்லது நுழைவாயிலொன்று நிர்மாணித்தல் சட்டத்துக்கமைவானதாகாது. பாதிப்பிற்குள்ளான, அல்லது துருப்பிடித்த கூரைத்தகடுகளை மாற்றுதல், உடைத்த சுவர்களை திருத்தியமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் அவ்வகையான வேறு பணி நடவடிக்கைகளை தவிர தற்போதைய அமைவில் செய்யப்படும் மாற்றம் ஏதேனும் சட்டததுக்கமைவானதாகாது.

(3) கட்டிட வரம்பினுள் தற்காலிக அல்லது நிரந்தர கட்டிடமொன்று, மதிலொன்று, நுழைவாயிலொன்று, வேலியொன்று, அறிவித்தல் பலகையொன்று அல்லது வேறேதேனும் நிர்மாணிப்புக்காக நட்டயீடற்ற ஒப்பந்தமொன்றின் மூலம் யாரேனுமொருவருக்கு பணிப்பாளரால் அனுமதி வழங்கப்படலாம். அவ்வகையான நட்டயீடற்ற ஒப்பந்தமொன்றின் மூலம் நிர்மாணிக்கப்படுகின்ற ஏதேனும் நிர்மாணிப்பொன்று பணிப்பாளரால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் எழுத்து மூலம் அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதனை உடைத்து அகற்றிக் கொள்வதற்கு குறித்த நபர் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வகையான சந்தர்ப்பங்களில் ஏற்படும் இழப்புகளுக்கு எவ்வித நட்டயீடும் கொடுக்கப்படலாகாது.

(4) பணிப்பாளரின் சிபாரிசு கிடைக்கப்பெற்றதன் பின்பு வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் இவ் வரம்புகள் அதிகரிக்கவோ குறைக்கவோ அமைச்சருக்கு அதிகாரமுள்ளது. இவ்வரம்புகள், ஏதேனும் வீதியொன்றுக்கு அல்லது அதனின் ஒரு பகுதிக்கு ஏற்றவாறு நிர்ணயிக்கப்படலாம்.

(5) இவ் எல்லையின் இருப்பக்கங்களிலும் காணப்படும் காணிப்பிரதேசம், "கட்டிட நிர்மாண வரம்பு" என அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும்.

(6) இந்நயதிச்சட்டத்தின் கீழ் எடுக்கக்கூடிய வீதிகளுள் வாகனங்கள் தொடர்பிலமைந்த பார வரம்புகள் மற்றும் கனவளவு அவ்வாறாயின் வாகனத்தின் நீளம், அகலம் மற்றும் உயரம் அமைச்சரினால் காலத்துக்காலம் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

(7) அமைச்சரினால் மேலே (5) உப பந்தியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட பார வரம்புகள் மற்றும் கனவளவு அவ்வாறாயின் வாகனத்தின் நீளம், அகலம் மற்றும் உயரம் பிரதேச பொறியியலாளரினால் உரிய வீதியில் இடத்திற்கு இடம் எளிதாக காணக்கூடிய வகையில் ஒழுங்காக காட்சிக்கு வைத்தலுக்கு ஏற்பாடுசெய்தல் சட்டத்துக்கமைவானதாகும்.

(8) (அ) குறித்த ஏதேனும் வீதியொன்றில் அக்கட்டிடங்களை நிர்மாணிக்கும் வரம்பினுள் கனியங்களை அகழுதல் மற்றும் கனிய அகழ்வு கருமங்களுக்காக கனிய கிணறுகளைத் தோண்டுதல் குற்றமாகும்.

(ஆ) அக்குற்றம் தொடர்பில் நீதிபதியொருவரால் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் குற்றத்தின் கடும் தன்மை மற்றும் குற்றத்தின் தன்மைக்கேற்ப ரூபா ஐந்தாயிரத்திலிருந்து இருபத்தைந்தாயிரம் வரைக்குமான தண்டமொன்றுக்கு அல்லது 06 மாதங்களுக்குக் குறையாத ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது அவ்விருவகையிலுமான குற்றத்திற்கு உட்படுதல் வேண்டும், அவ்வாறு குற்றவாளியாக்கப்படும் நபரொருவரிடமிருந்து குறித்த அவ்வீதி தோண்டுதல் காரணமாக வீதிக்கு ஏற்பட்ட நட்டத்தினை பிரதேச பொறியியலாளரால் கணிப்பிடப்படும் முறையில் அதனை அறவிட்டுக்கொள்வதற்கு பணிப்பாளருக்கு அதிகாரமுள்ளது.

(9) கட்டிட நிர்மாண வரம்பினுள் அமைந்த சட்டத்துக்குப் புறம்பான நிர்மாணிப்புக்களை பிரதேச பொறியியலாளரினால் அகற்றப்படுவதற்கு ஏற்பாடுச்செய்யும் கருமங்களுக்காக ஏற்பட்ட செலவினை உரிய நபரிடமிருந்து அறவிட்டுக்கொள்வது சட்டத்துக்கமைவானதாகும் :

அவ்வாறாயினும், இந்நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பாக திருத்தத்தேவைகளுக்காக அனுமதிப்பத்திரமொன்று தேவைப்படும் யாதேனும் கட்டிடமொன்றுக்கு, எல்லை மதிலொன்றுக்கு அல்லது நுழைவாயிலொன்றுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் அல்லாத அல்லது இந்நியதிச்சட்டத்தின் தத்துவங்கள் அமுல்படுத்தப்படும் திகதியிலிருந்து யாதேனும் கட்டிடமொன்றுக்கு, எல்லை மதிலொன்றுக்கு, நுழைவாயிலொன்றுக்கு, அல்லது வேறேதேனும் அமைவொன்றுக்கு, அல்லது ஏதேனும் கிணறொன்றுக்கு, குட்டையொன்றுக்கு அல்லது கனிய கிணறொன்றுக்கு, செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஏதேனும் திருத்த நடவடிக்கைகள் தொடர்பில் அல்லது இவ்வுபபந்தியில் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் யாதேனும் உரித்தற்றிருத்தல் வேண்டும் மேலும் இவ்வுப பந்தியில் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் யாதேனும் பஸ் தரிப்பு நிலையங்கள், துண்டு பட்டியல் பலகைகள், அறிவிப்புப் பலகைகள் என்பவற்றின் அமைவு தொடர்பில் உரித்தற்றிருத்தல் வேண்டும்.

27. (1) புதிய வீதியொன்றை அமைத்து, வரும் திகதியொன்றில் அதனின் நிர்மாணப் பணி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில், ஏதேனும் வரைபடமொன்றில் நிரூபணமாக்கப்பட்ட விதத்தில் அல்லது விபரமளிக்கப்பட்டவாறு பிரதேச பொறியியலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ரேகையிலிருந்து வீதியின் இருபக்க காணிப் பிரதேசங்கள் அமைச்சரினால், உத்தேச வீதியின் கட்டிட நிர்மாண வரம்பாக பிரகடனப்படுத்தல் வேண்டும். *உத்தேச கட்டிட வரம்புகளினுள் நிர்மாண விடயத்தின் கட்டுப்பாடு.*

(2) கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கும் பொறுப்பை கொண்ட அதிகாரிகளினால், அமைச்சரால் பிரகடனப்படுத்தப்படும் பட்சத்தில் அவ்வகையான பிரகடனமொன்றின் அவகாசத்தில் யாதேனும் புதிய கட்டிடமொன்றினை நிர்மாணித்தலுக்காக அனுமதி வழங்கலாகாது. கட்டிட நிர்மாண வரம்பு அவ்வீதிகளுக்கு சமமான வகையில் உரியதாயிருத்தல் வேண்டும்.

28. (1) யாரேனும் நபரொருவரால், கட்டிட எல்லைகளுக்கு அடுத்ததாக அமைந்துள்ள யாதேனும் காணியொன்று, அல்லது மாகாண சபைக்கு உரித்தான யாதேனும் காணியொன்று தவறான முறையில் உள்வாங்கப்படுவது சட்டத்துக்கமைவற்றதாகும். *காணிகளை தவறான முறையில் உள்வாங்கல்.*

(2) அப்படிப்பட்ட தவறான முறையில் ஈர்ப்புச்செய்யப்பட்டதனை விசாரிக்கும் கருமங்களுக்காக அளத்தலின் பொருட்டு இந்நியதிச்சட்டத்தின் கீழ் பிரதேச பொறியிலாளருக்கும் அவரின் அதிகாரத்தின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் அதிகாரமுள்ளது.

(3) பிரதேச பொறியியலாளர் அல்லது அவரின் அதிகாரத்தின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்களால், மேலே 28 ஆம் பந்தியில் (2) ஆம் உப பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறான முறையில் உள்வாங்கியவர்களை அகற்றுதல் அல்லது விடுவித்துக்கொள்ளல் சட்டத்துக்கமைவானதாகும்.

29. யாதேனும் மாகாண வீதியொன்றுக்கு தடைகளை ஏற்படுத்துதல் அல்லது தவாறன முறையில் உள்வாங்குதலை மேற்கொள்ளும் யாரேனும் நபரொருவருக்கு பிரதேச பொறியியலாளரினால், அத்தடைகளை அல்லது தவறான உள்வாங்கலை உடனடியாக அல்லது குறித்த தினத்தில் அல்லது அத்திகதிக்கு முன்பதாக அகற்றுமாறு, அல்லது நிறுத்துமாறு எழுத்திலமைந்த அறிவிப்பொன்றின் மூலம் கட்டளையிடுதல், சட்டதிற்கமைவானதாகும். அக்கட்டளையை பெற்ற அவ்வாறான யாரேனும் நபரொருவரால் நியாயமான காலத்தினுள் அக்கட்டளையின் பிரகாரம் செயற்படுதல் நிராகரிக்கப்பட்டால் அல்லது கவனத்திற் கொள்ளாமல் விடும் பட்சத்தில், அல்லது அக்கட்டளை வழங்கப்படும் ஆள் தொடர்பில் ஏதேனும் சந்தேகம் உள்ளதாயின் பிரதேச பொறியியலாளரால் அவ்வாறான ஏதேனும் தடைகளை ஏற்படுத்தும் அல்லது தவறான முறையில் உள்வாங்கப்பட்டதனை உடனடியாக அகற்றுவதற்கு அல்லது நிறுத்துவதற்கு ஏற்பாடுகளைச்செய்தல் சட்டத்திற்கமைவானதாகும். மேலும், இக்கருமங்களுக்காக பிரதேச பொறியியலாளரினால் அல்லது தேவைப்படும் பட்சத்தில் *சட்டரீதியற்ற நிர்மாணிப்புகள், தடைகள் மற்றும் தவறான உள்வாங்கல்களை அகற்றுதல்.*

பிரதேச பொறியியலாளரினால் எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் நபரொருவரின் மூலம் அவ்வகற்றுதலுக்காக அல்லது நிறுத்துதலுக்காக தேவைபடும் உபகரணங்கள் சகிதம் ஏதேனும் வீடொன்றுக்கு, தோட்டமொன்றுக்கு, கூடொன்றுக்கு அல்லது வேறு சூழலொன்றுக்கு பிரவேசித்தல் சட்டத்துக்கமைவானதாகும். பிரதேச பொறியியலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்டவர்களினால் இப்பந்தியின் கீழ் உண்மையில் செய்யப்பட்ட செலவுகள் பிரதேச பொறியிலாளரினால் அறிவிக்கப்பட்டதன் பின்பு தடைகளை அல்லது தவறான முறையில் உள்வாங்கலை மேற்கொண்ட நபரால் செலுத்தப்படுதல் வேண்டும். அக்குறித்த நபரால் உரிய செலுத்தல்கள் மேற்கொள்ளப்படாவிடின் இதுபற்றி அதிகாரமுள்ள நீதிமன்றத்துக்கு பிரதேச பொறியியலாளரால் சத்தியக்கடதாசியொன்று சகிதம் அறிக்கைப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு அறிக்கைப்படுத்தப்படும் போது அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையானது அதற்காக உரியவகையில் மேற்கொள்ளப்பட்ட செலவென நீதிமன்றத்துக்கு தெரியவரும் செலுத்தல் கட்டணத்துடன் நீதிமன்றத்தால் தண்டத்தொகையாக அறவிடப்பட்டு மாகாண சபையின் பொது நிதியத்தில் சேர்த்தல் வேண்டும். அவ்வாறாயினும் அச்சூழலின் உரிமை தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் சகல ஒப்பனைகள் பதிவேடுகள், மற்றும் ஆவணப்பத்திரங்கள் ஒழுங்கான முறையில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்பு, ஏதேனும் அகற்றுதல் இடம்பெற்றிருக்குமாயின் அதனில் ஏற்பட்ட சகல நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பில் நட்டயீட்டை செலுத்துவதற்கு, பிரதேச பொறியியலாளர் உட்படுதல் வேண்டும். இருப்பினும் சூழலின் உரிமையாளரென சொல்லிக்கொள்ளும் ஆளானவர் அவ் ஒப்பனை, பதிவேடு, மற்றும் ஆவணப்பத்திரங்களை சமர்ப்பிக்கப்படுவதனை நிராகரித்தால், அல்லது அவரால் விட்டுவிடப்பட்டால் அல்லது அவற்றினை முன்வைக்காவிடின் பிரதேச பொறியியலாளரினால் அக்கட்டிடம் சுற்றி வளைக்கப்படுவது அல்லது தவறான முறையில் உள்வாங்கப்படுவதனை அகற்றப்படுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்தருணம், அச்சூழலின் உரிமையாளரென சொல்லிக்கொள்ளும் குழாத்தினரால் தீர்மானிக்கப்பட்டால், அதனில் ஏற்பட்ட ஏதேனும் நட்டங்கள் அல்லது இழப்புகள் தொடர்பில் பிரதேச பொறியியலாளர் பொறுப்பளிக்கத்தேவையில்லை.

## *V* ஆவது பகுதி

### *வீதிகளுக்குச் செய்யப்படும் நட்டங்கள் தவறுகள் மற்றும் தண்டனைகள்.*

வீதிகளுக்குச் செய்யப்படும் நட்டங்கள்.

30. இந்நியதிச்சட்டத்திற்குரிய கீழ்க் குறிப்பிடப்படுகின்ற ஏதேனுமொரு நடவடிக்கை குற்றமாக இருப்பதுடன், அந்நடவடிக்கைக்குரிய குற்றம் தொடர்பில் நீதிபதியால் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்பு ரூபா ஐந்தாயிரத்திலிருந்து இருபத்தைந்தாயிரம் வரைக்கும் தண்டமொன்றுக்கு அல்லது 6 மாதங்களுக்கு குறையாத ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனையொன்றுக்கு அல்லது இவ்விருவகையிலுமான தண்டனைக்கும் குற்றவாளியாக்கப்பட்ட நபரொருவர் உட்படுத்தப்படல் வேண்டும்.

(1) ஏதேனும் வீதியொன்று அல்லது வீதியொன்றின் பிரிவொன்று, மைல் கல்லொன்று/கிலோமீற்றர் கல்லொன்று, விளக்குக்கம்பம், வேலி, பாலம், மதில், வாகனப்போக்குவரத்தினை கட்டுப்படுத்தும் உபகரணங்கள், வேலி அல்லது ஏதேனும் வீதியொன்றுக்குரித்தான வேறேதேனும் நிர்மாணிப்பு அல்லது உபகரணமொன்றை சேதப்படுத்தப்படுவது.

(2) ஏதேனும் வீதியொன்றில் அல்லது வீதியில் இருபக்கத்திலும் பிரதேச பொறியிலாளரின் அதிகாரத்தின் கீழ் வளர்க்கப்பட்ட ஏதேனும் மரமொன்று, புற்பகுதி அல்லது ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் வேலியொன்றை அகற்றுதல் அல்லது சேதப்படுத்தப்படல்.

(3) வீதியொன்றின் பயன்பாட்டை நிருத்தும் கருமங்களுக்காக அல்லது வீதியொன்றினை பழுதுபார்ப்புக்கு உட்படுத்தும் போது வீதியினை உபயோகாத்திற் கொள்ளுதல், நபர்களுக்கு ஏதேனும் வகையில் பாதிப்புக்கள் ஏற்படுவதனை இல்லாது செய்யும் கருமங்களுக்காக வைக்கப்பட்டுள்ள ஏதேனும் வேலி, பாதுகாப்பரண் அல்லது வேறெதனையும் அகற்றுதல்.

(4) ஏற்றப்படும் தருணத்தில் அல்லது இறக்கப்படும் தருணத்தில் அவ்வாறில்லாவிடின் ஏதேனும் வீதியொன்றில் பலகை, மரக்குற்றி, மணல், கற்கள் அல்லது வேறேதேனும் பொருட்களைப் போடுதல் சேர்த்தல், நிர்மாணித்தல் அல்லது ஒன்று சேர்த்தல்.

(5) ஏதேனும் வீதியொன்றிலிருந்து கற்கள், மணல், மணற்கல், மண், புற்பகுதி அல்லது வேறு பொருட்கள் ஏதேனும் சேர்த்தல், கொண்டு செல்லல்.

(6) ஏதேனும் வீதியொன்றுக்கு ஏதேனும் வகையில் நட்டம் ஏற்படும் வண்ணம் எவ்வகையிலுமான விலங்கினங்களை மேய்த்தல், கொண்டு செல்லல்.

(7) நீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்ட ஏதேனும் பக்கக் காணொன்றின் வழியே மழைநீர் வழிந்தோடலுக்கு, அல்லது ஏதேனும் மதகொன்று, அல்லது வேறு வகையிலான நிர்மாணிப்பொன்றின் மூலம் தண்ணீர் வெளியேறுவதற்கு தடைகளை ஏற்படுத்துதல்.

(8) வீதிக்கு ஏதேனும் வகையில், நட்டமேற்படும் மரம், மரக்குற்றி, கற்கள், இரும்பு அல்லது வேறேதேனும் பொருட்களை இழுத்துச் செல்லுதலின் காரணமாக அல்லது ட்ரேலர் வாகனமொன்றின் மூலம் கொண்டு செல்லலினால் அவ்வீதியின் மீது வைத்து இழுத்தல்.

(9) ஏதேனும் வீதியொன்றின் மீது காற்று நிரப்பப்படாத சில்லுகளற்ற, இயந்திரோபகரணங்களை செலுத்துதல்.

(10) ஏதேனும் வீதியொன்றுக்குரிய ஏதேனும் வாங்கியொன்று, கிடங்கொன்று, காணொன்று அல்லது குழியொன்று அல்லாவிடின் ஏதேனும் வீதியொன்றின் மீது அல்லது குறுக்காக ஏதேனும் வீதியொன்றின் மேற்புறத்திலுள்ள நீர் வழியொன்றினை உடைத்தல் அல்லது அவை ஏதேனுக்கும் பாதிப்பையேற்படுத்துதல்.

(11) ஏதேனும் கருமங்களுக்காக ஏதேனும் வீதியொன்றின் குறுக்கே, வழியே அல்லது கீழ் கணிய அகழ்வு தோண்டுதல் அல்லது வேறு நடவடிக்கையொன்றை மேற்கொள்ளல்.

(12) ஏதேனும் வீதியொன்றிலுள்ள பக்கக்காணின் வெளித்தொங்கலின் மேல் ஊடறுக்கும் விதத்தில், ஏதேனும் வீடொன்றுக்கு ஒன்று சேர்த்தலை மேற்கொள்ளல் அல்லது ஈர்த்தல் அல்லது ஏதேனும் வீடொன்றுக்கு முன்புறத்தில் பொருட்களை ஏற்றுதல், அல்லது பொருட்களை இறக்குதல் கருமங்களுக்காக ஏதேனும் வீதியொன்றின் பக்கக்காண்களுக்கு சேதம் ஏற்படுத்துதல் அல்லது நிரப்புதல், மூலம் அல்லது அதற்கு ஏதேனும் இடையூறுகள் ஏற்படுத்துதலின் மூலம் ஏதேனும் வீதியொன்றின் ஏதேனும் பகுதியொன்று அல்லது அதனின் பக்கக்காணொன்று மேலாக எவ்வகையிலும் தற்காலிக ஆதாரமொன்றின் மூலம் அல்லது வேறு வகையில் மறைத்து விடுதல் அல்லது மூடுதல்.

(13) ஏதேனும் மதகொன்றின் அல்லது நிர்மாணிப்பொன்றிலுள்ள ஓட்டையொன்றினை அரைப்பகுதியாக அல்லது முழுமையாக மூடிவிடுதல் அல்லது அதற்கு இடையூறுகளை செய்தல் அல்லது மண் நிரப்புதல் மூலம் அல்லது வேறு வீதியொன்றில் தற்போதைய மட்டத்தின் ஏதேனும் பாலமொன்றுக்கு, மதகொன்றுக்கு அல்லது ஏதேனும் வீதியொன்றுக்கு அடுத்தான ஏதேனும் காணியொன்றினை நிரப்புதல் அல்லது நிர்மாணித்தல், அல்லது சுதந்திரமாக நீர் வழிந்தோடுதலை தவிர்த்தல், அதற்கு தடைகளை ஏற்படுத்துதல் அல்லது அதனை நிறுத்துவதன் பொருட்டு வேறு செயல்களை மேற்கொள்ளல்.

(14) ஏதேனும் வீதியொன்றின் வீதித்தளத்திற்கு கீழாக அமைந்த காணியொன்று அல்லது வங்கியொன்று வீதிக்கு எவ்வகையிலும் அல்லது சேதமேற்படும் வகையில் வெளிச்சத்தை ஏற்படுத்துதல், வாங்கியினை வெட்டுதல், அகழ்தல் அல்லது வேறு எவ்வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(15) ஏதேனும் வீதியொன்றுக்கு அல்லது ஏதேனும் வீதியொன்றின் பக்கக்காணுக்கு அல்லது மதகுக்கு அல்லது பாலமொன்றுக்கு கற்கல், மண், மணல், குப்பைக்கூலங்கள், கற்தூள்கள், உமி, மரத்தூள் அல்லது வேறேதேனும் கழிவுப்பொருட்கள் அல்லது கழிவு நீர், அல்லது வேறேதேனும் கழிவுப்பொருட்கள் அல்லது கழவு நீர், அல்லது அசுத்தமான தண்ணீரை போடுதல் அல்லது திருப்புதல் அல்லது வழிந்தோடுவதற்கு வழிவகைகளைச் செய்தல் அல்லது அவ்வாறு இடம் பெறுவதற்கு வழிவகுத்தல்.

*வீதிகளுக்கு செய்யப்படும் பாதிப்புக்கள், நட்டங்கள் தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களின் கடமைகள்.*

31. (1) ஏதேனும் வீதியொன்றுக்கு சேதத்தை ஏற்படுத்தும் செயலொன்றை மேற்கொள்ளும் யாரேனும் நபரொருவருக்கு அச்செயலினை உடனடியாக நிறுத்துமாறு, குறைக்குமாறு அல்லது மாற்றியமைக்குமாறு அறிவிப்புச்செய்வதற்கு, பிரதேச பொறியியலாளருக்கு அதிகாரமுள்ளது.

(2) ஏதேனும் வீதியொன்றுக்கு செய்யப்பட்ட ஏதேனும் சேதமொன்று அல்லது இடையுறொன்றினை நிறுத்துமாறு, அல்லது மேற்கொள்ளாமைக்காக பிரதேச பொறியியலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனும் உத்தியோகத்தரொருவரினால் தன்னிச்சையான தொழிலாளர்கள், ஆயுதங்கள், உபகரணங்கள் அல்லது இயந்திரோபகரங்கள் சகிதம் ஏதேனும் காணியொன்றுக்கு பிரவேசித்தலானது சட்டத்துக்கமைவானதாகும். அதனின் பெறுபேறாக அக்காணிக்கு அல்லது ஆதனத்துக்கு செய்யப்பட்ட ஏதேனும் நட்டத்துக்காக நட்டயீடு ஏதேனும் செலுத்தப்படலாகாது.

(3) ஏதேனும் வீதியொன்றினை பழுதுபார்த்தல், ஒழுங்குப்படுத்தல், விருத்திசெய்தல் கருமங்களுக்காக அல்லது ஏதேனும் அபாயகரமான சந்தர்ப்பங்களில் பிரதேசப் பொறியியலாளர் தேவையென கருதப்படும் ஏதேனும் காலத்துக்காக ஏதேனும் வீதியொன்றில் அல்லது அதனில் ஒரு பகுதிக்கு அல்லது எவ்வகையிலுமான வீதியொன்றில் விலங்கொன்றில் மேல் செல்லுதல் விலங்கொன்று அல்லது வண்டியொன்றினை இழுத்துச்செல்லுதல் அல்லது வாகனங்களை ஓட்டுதல் போன்றவற்றை, சகலருக்குமாக தடை செய்வதற்கு பிரதேச பொறியியலாளருக்கு அதிகாரமும் அனுமதியும் உள்ளது.

*வீதிகளுக்கு செய்யப்படும் இடையூறுகள்.*

32. கீழ்க்குறிப்பிடப்படுகின்ற ஏதேனும் ஒரு செயல் இந்நியதிச்சட்டத்தின்கீழ் குற்றமாகுவதுடன், அவ்வகையான குற்றம் தொடர்பில் நீதிமன்றமொன்றின் மூலம் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் ரூபா ஐயாயிரத்திற்கு குறையாத ரூபா இருபத்தைந்தாயிரத்திற்கு மேற்படாத தண்டனையொன்றுக்கு அல்லது 06 மாதங்களுக்கு குறையாத ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனையொன்று அல்லது இவ்விருவகையிலுமான தண்டனைகளுக்கு உட்படல்வேண்டும் :-

(1) ஏதேனும் பிரசித்த வீதியொன்றின் வழியே ஓட்டத்தினை மேற்கொள்வதால் ஏதேனும் வாகனமொன்றுக்கு, வண்டியொன்றுக்கு, படகொன்றுக்கு, தோணியொன்றுக்கு அல்லது வேறு வகையான போக்குவரத் தொன்றினை வேண்டுமென்று தவிர்த்தல் அல்லது தடைப்படுத்தல்.

(2) எளிதாக செலுத்துவதனை பாதிப்படையச்செய்யும் அல்லது தடைப்படுத்தும் விதத்தில் ஏதேனும் வீதியொன்றில், கால்வாயொன்றின் அல்லது ஆறொன்றில், ஏதேனும் வேலி அல்லது வேறேதேனும் இடையூறொன்றை, ஏற்படுத்தல் அல்லது அவ்விடயூற்றினை தொடர்ந்து வைத்தல்.

(3) ஏதேனும் இடர் ஒன்று, அல்லது விட்டுவிடுதல் ஒன்று ஏற்பட்டாலேயொழிய அல்லது அவ்வகையான இடர்களின் போது அதனை அகற்றுவதற்கு தேவைப்படுகின்ற காலத்துக்கு மேலான காலமொன்றுக்கு ஏதேனும் வண்டியொன்று, மோட்டார் வாகனமொன்று, கொள்கலனொன்று அல்லது இயந்திரோபகரண மொன்றினை வீதியில் வைத்துவிட்டுச் செல்லல் அல்லது வைத்து விட்டுச் செல்வதற்கு அனுமதியளித்தல்.

(4) சூரிய மறைவுக்கு மற்றும் சூரிய உதயத்துக்கு இடைப்பட்ட காலத்தினுள், வெளிச்சமொன்றில்லாமல், ஏதேனும் இயந்திரோபகரணம், உடைந்த வாகனமொன்று அல்லது வேறேதேனும் வாகனமொன்றினை வீதியில் வைத்துச்செல்லல்.

(5) ஏதேனும் வீதியொன்றில், ஆறொன்றில் அல்லது கால்வாயொன்றில் அல்லது அவ்வீதியில், ஆற்றில் மற்றும் கால்வாயில் கற்கள், செங்கல், மரம், எண்ணெய், கண்ணாடி அல்லது வேறேதேனும் பொருட்களை வைத்துச்செல்லல் அல்லது அவற்றுக்கு வீசியெறிதல்.

(6) ஏதேனும் வீதியொன்றின் வழியே அல்லது குறுக்கே ட்யூப், குழாய், வேறெவற்றையும் இடுதல் அல்லது தும்புக்கயிறு, கயிறு அல்லது கம்பிகளை கட்டி வைத்தல்.

(7) விற்பனைக்கு அல்லது காட்சிப்படுத்தும் நோக்கங்களுக்காக அல்லது வேறேதேனும் கருமங்களுக்காக ஏதேனும் பாய்கள், புடவை, கொடிகள் அல்லது வேறேதேனும் பொருட்களை ஏதேனும் வீதியொன்றின் மீது அல்லது வீதியில் தொங்க விடுதல் அல்லது கொடி அல்லது தும்புக்கயிற்றில் முடிச்சிட்டு ஏதேனும் வீதியொன்றில் வழியே அல்லது குறுக்கே துணிகளை காய விடுதல் அல்லது தொங்க விடுதல்.

(8) ஏதேனும் வீதியொன்றுக்கு அல்லது வீதியினுள் மாடுகள், ஆடுகள், செம்மறியாடுகள், குதிரைகள், நாய்கள் அல்லது வேறு எவ்வர்க்கத்திலுமான விலங்கினங்களை விட்டுவிடுதல்.

(9) மேலே 8 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள விலங்கினங்களுக்கு ஏதேனும் வீதியொன்றுக்கு அல்லது வீதியினுள்ளே செல்வதற்கு இயலுமான வகையில் அவற்றினை கட்டி வைத்தல் அல்லது கயிறிடல்.

(10) ஏதேனும் வீதியொன்றில் வண்டிகள், மோட்டார் வாகனங்கள், மாடுகள் அல்லது வேறு வகையிலான விலங்கினங்களை கழுவுதல்.

(11) ஏதேனும் வீதியொன்றில் இருபக்கமும் உள்ள காண்கள், மதகுகள், தனத காணிக்கு அல்லது ஆதனத்துக்கு எல்லையாக வரும் பட்சத்தில் அக்காண்கள் அல்லது மதகுகளுக்கும் இடையூறுகளேற்படுத்தல் அல்லது மூடிவிடுதல்.

(12) ஏதேனும் வீதியொன்றின் வீதி மேற்தளத்தின் மீது அல்லது வீதிமருங்கில் அல்லது வீதி ஒதுக்கீட்டு பகுதியில் அல்லது பக்கக்காண்களின் மீது அறிவிப்புப் பலகை அல்லது பெயர்ப்பலகைகள் அல்லது வேறேதேனும் நிரந்தர அல்லது தற்காலிக நிர்மாணிப்பொன்றினை நிர்மாணித்தல்.

*வீதிகளுக்கு செய்யப்படும் இடையூறுகள் தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களின் கடமைகள்.*

33. (1) பிரதேச பொறியியலாளர், அவரின் உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் தேவைப்படுகின்ற ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் சகிதம் வீதியின் மேல் அல்லது வீதியினுள்ளே செய்யப்பட்டுள்ள ஏதேனும் இடையூறொன்றை தவிர்த்தலுக்கு, அகற்றுதலுக்கு, உடைத்தலுக்கு அல்லது அழித்தலுக்காக ஏதேனும் காணியொன்றுக்கு அல்லது ஆதனமொன்றுக்கு பிரவேசித்தல் சட்டத்துக்கமைவானதாகும். இங்கு செய்யப்படும் செலவுகள், உரிய ஆளிடமிருந்து அறவிட்டுக்கொள்வதும் சட்டத்துக்கமைவானதாகும்.

(2) பிரதேச பொறியியலாளர் அவரின் உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள், தேவைப்படுகின்ற ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் சகிதம் வீதியின் மேல் அல்லது வீதியினுள்ளே செய்யப்பட்டுள்ள ஏதேனும் இடையூறொன்றை தவிர்ப்பதெனில் செய்யப்படும் செலவுகளை உரிய ஆளிடமிருந்து அறவிட்டுகொள்வதற்காக ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சட்டத்துக்கமைவானதாகும்.

(3) பிரதேச பொறியியலாளரினால் இது தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் நபரொருவரினால் மேலே 32 ஆம் பந்தியிற் 8 மற்றும் 9 ஆகிய உபபந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விலங்கினமொன்று தடை செய்யப்பட்டு அதனை பிடித்து அவ்விலங்கின் பொறுப்பினை அருகாமையில் அமைந்துள்ள காவல் நிலையத்துக்கு ஒப்படைத்தல் சட்டத்துக்கமைவானதாகும். பிரதேச பொறியியலாளர் அல்லது பிரதேச பொறியியலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் நபரொருவரினால் மேற்சொல்லப்பட்டவாறு தடைசெய்யப்பட்டு பிடிக்கப்பட்ட அவ்விலங்கினங்கள் தொடர்பில் நட்டயீட்டுக்காக உரிமை கோருதலுக்கு உரிமையாளருக்கு உரிமையற்றிருக்கும்.

(4) அவ்வகை ஏதேனும் விலங்கொன்று ஏற்றி அல்லது இறக்கப்படும் வரை, அவ்விலங்கினத்தை ஏதேனும் வீதியொன்றில் கட்டிவைத்தலுக்கு, அல்லது பொலிசுக்கு அல்லது வேறு யாரேனுமொருவருக்கு, அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு அனுமதியுள்ளது. இருப்பினும் அவ்வாறு கட்டிவைத்தலானது, வீதியினை உபயோகிப்போருக்கு ஏதேனும் வசதியினங்களை ஏற்படுத்தாத வகையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

34. (1) ஏதேனும் காணியின் அல்லது அக்காணியின் ஏதேனும் தொடர்புகள் சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில் வீதியொன்றினை நிர்மாணிப்பதற்கு, விரிவுபடுத்துவதற்கு, திருப்புவதற்கு மாற்றியமைப்பதற்கு அல்லது பாலமொன்று, மதகொன்று, கடவையொன்று, வாங்கியொன்று அல்லது வேறேதேனும் நிர்மாணிப்பொன்றுக்காக வேலியொன்று, காணொன்று, வாங்கியொன்றை அமைப்பதற்கு அல்லது கிடங்கொன்றைத் தோண்டுவதற்கு அல்லது வேறேதேனும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தேவைப்படுமேயானால் அக்காணி அல்லது காணியின் தொடர்பு (460 ஆவது அதிகாரத்தின் கீழ்) காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் ஊவா மாகாண சபைக்காக அரசாங்கத்தினால் சுவீகரித்துக் கொள்ளலாம். ஆதன சுவீகரிப்பு.

(2) இந்நியதிச்சட்டத்தின் கருமங்களுக்காக மாகாணத்தினுள் ஏதேனும் அரசாங்க காணியொன்று தேவைப்படும் பட்சத்தில் அரசியலமைப்புச்சட்ட 13 ஆவது திருத்தத்தின் II ஆம் பிரிவின் 1-1: 2 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

35. காணியின் சுவீகரிப்பு அல்லது வேறேதேனும் காரணங்கள் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய நட்டயீட்டுப் பணத்தினளவு கணக்கிடப்படலுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாயிருத்தல் வேண்டும் :- நட்டஈடு செலுத்தல்.

(1) புதிய வீதிகளையமைக்கும் கருமங்களுக்காக சுவீகரிக்கப்பட்ட காணி அல்லது ஆதனம் தொடர்பில், (460 ஆவது அதிகாரத்தின் வாறு) காணி சுவீகரிப்பு சட்டத்தில் உட்படுத்தப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டயீடு செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் தற்போதுள்ள காணியொன்றில் கட்டிட நிர்மாண வரம்பினுள் அமையப்பெற்றுள்ள ஏதேனும் கட்டிடமொன்று அல்லது வேறேதேனும் நிர்மாணிப்பொன்று தொடர்பில், நட்டயீடு செலுத்தல் சம்பந்தமாக அமுலிலுள்ள தேசியக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கவனத்திற்கொண்டு நட்டயீடு செலுத்தப்படுதல் வேண்டும்.

36. (1) பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர், கிராமசேவை உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், சமாதான அலுவலர் ஆகிய சட்டத்தை அமுல்படுத்தும் சகல உத்தியோகத்தர்களினாலும் அவர்களினது அவ்வவ் அதிகார பிரதேசத்தினுள் வீதிகளில் மேற்கொள்ளப்படும் பணி நடவடிக்கைகள் மற்றும் இந்நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் மற்றும் தவறுகள் செய்தலினை தவிர்த்தல் தொடர்பில், அவர்களது அதிகாரப் பிரதேசத்தினுள்ளே, மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு தன்னிச்சையாக உதவியினை நல்குதல் அச்சகல உத்தியோகத்தர்களினது பொறுப்பாகும். சட்டத்தினை நடைமுறைபடுத்தும் அலுவலர்களின் உதவி.

(2) தங்களது எண்ணங்களின் பிரகாரம் அல்லது வேறுயாரேனும் நபர்களினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவ்வகையான யாதேனும் பிழை அல்லது குற்றங்களை அறிந்திருக்கும் அச்சகல உத்தியோகத்தரினாலும் இந்நியதிச்சட்டத்தின் கீழ் உரியவாறு பணிப்பாளருக்கு இது தொடர்பில் புகாரளித்தல் வேண்டும்.

37. இந்நியதிச்சட்டத்தின் கீழ் ஏதேனும் செயலொன்றை மேற்கொள்ளும் விதத்தில் ஏதேனும் மறைமுகமாக வன்செயல்களில், ஒழுக்கக்கேடான நடத்தையில் ஈடுபடல் மற்றும் இடஞ்சல்களை செய்தல் அல்லது வேண்டுமென்றே அழுத்தங்களையும் தீங்குகளையும் மேற்கொள்ளும் சகல உத்தியோகத்தர்களும் நபர்களும், இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றத்துக்கு குற்றவாளியாக்கப்படல் வேண்டும். அலுவலர்களின் ஒழுங்கீனங்கள்.

38. இந்நியதிச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் குற்றத்துக்குரிய தண்டனை நிச்சயிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் நியதிச்சட்டத்தின் கட்டளைக்கு, ஏதேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது வழங்கப்பட்ட கட்டளையொன்றை மீறுதல் அல்லது அதன் பிரகாரம் செயற்படுதலை அலட்சியம் செய்யும் சகல நபர்களும், இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்ட வேண்டுமெனின், அக்குற்றம் தொடர்பாக நீதிபதியொருவரின் முன்நிலையில் நடாத்தப்படும் குறுகிய வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில், ரூபா ஐந்தாயிரத்திற்கு குறையாத ரூபா இருபத்தைந்தாயிரத்திற்கு மேற்படாத தண்டமொன்றுக்கு அல்லது 06 மாதத்துக்கு குறையாத 02 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையொன்றுக்கு அல்லது அவ்விரு விதத்திலுமான தண்டனையொன்றுக்கு உட்படல் வேண்டும். தவறுகள் மற்றும் தண்டனைகள்.

39. (1) இந்நியதிச்சட்டத்தின் கீழ் அறவிடக்கூடிய செலவென்பது, மாகாண சபையினால் உண்மையில் செய்யப்பட்ட செலவுத்தொகை அல்லது அத்தொகையுடன் இருபத்தைந்து சதவீத (25%) மேலதிக தொகையும் சேர்க்கப்பட்டு வரும் மொத்தத்தொகையே இதன் கருத்தாகும். அவ்வாறான உண்மைச்செலவுடன் (25%) இருபத்தைந்து சதவீதம் மேலதிக தொகையும் சேர்க்கப்பட்டு, இதன் செலவு கணக்கிடப்படல் வேண்டும். செலவினை அறவிடுதல்.

(2) அறவிடப்படவுள்ள பணத்தொகை குறிக்கப்பட்டு பிரதேச பொறியியலாளரினால் செலுத்தல் பற்றுச்சீட்டொன்று தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும், அப்பற்றுச்சீட்டினை பொறுப்புக்குட்பட்ட நபரிடம் உரிய திகதியில் அல்லது

அதற்கு முன்பதாக முழுமையாக செலுத்தும்படி கட்டளையிட்டு, பிரதேச பொறியியலாளரினால் பொறுப்பளிக்க வேண்டிய நபரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) 39 ஆம் பந்தியின் இரண்டாவது (2) உப பந்தியின் கட்டளைகளுக்கிணங்க அந்நபர் செயற்படாதவிடத்து உண்மைச் செலவுடன் மேலதிகமாக இருபத்தைந்து சதவீதம் (25%) சேர்த்து உறுதிப்படுத்தப்பட்டு அக்காரணத்தை இந்நியதிச்சட்டத்தின் 26 (7) துணைப்பந்தியின் பிரகாரம் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

40. இந்நியதிச்சட்டத்திற்கு ஏற்புடைய வீதியொன்றுக்கு, வீதியின் பகுதி சார்ந்த விடயம் தொடர்பில் உரிமை, சொந்தம் அல்லது பயன்பாடு தொடர்பில் தனிப்பட்ட உரிமைக்கோரலுக்கு எவரும் உரிமைப்பெறுயியலாது.

41. யாரேனும் நபரொருவரால் இந்நியதிச்சட்டத்தின் 26 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிட வரம்பு மற்றும் வீதி உரிமை வரம்புகளுக்கிடையே ஏதேனும் நிர்மாணிப்பொன்று, மதிலொன்று அல்லது எவ்வகையிலும் அமைந்த அல்லது வேலியொன்றை நிர்மாணிப்பதாயின் அதற்குரிய அனுமதியினை பிரதேச பொறியியலாளரிடமிருந்து பெறப்படல் வேண்டுமென்பதுடன், வீதியினை அகலப்படுத்தல் அல்லது அபிவிருத்திச் செய்யும்போது அவ்வகையில் நிர்மாணிக்கப்பட்ட மதில் அல்லது எவ்வகையிலுமான வேலி எவ்வித நட்டயீட்டுக் கோரிக்கையுமின்றி தன்னிச்சையாக தனது செலவில் அகற்றிக்கொள்ளப்படுவதாகவும் அவ்வாறு அகற்றிக்கொள்ளப்படாவிடின் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் அகற்றப்படுவதற்கு தடங்களை அல்லது இடையூறுகளை மேற்கொள்ளப்படாததாகவும் அவ்வாறு அகற்றிக் கொள்ளப்படுவதற்காக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் செலவினை திணைக்களக்கட்டணத்துடன் ஏழு நாட்களுக்குள் செலுத்துவதாக பிரதேச பொறியியலாளருடன் ஒரு ஒப்பந்தத்துக்கு வருதல் வேண்டும்.

42. இந்நியதிச்சட்டத்தின் கீழ் வழங்கப்படவிருக்கும் சகல அறிவிப்புக்களும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வழங்கப்படுதல் வேண்டும். யாரேனும் நபரொருவரை தொடர்பு கொண்ட ஏதேனும் அறிவிப்பொன்று அல்லது அனுமதிப்பத்திரமொன்று அல்லது கட்டளையொன்று அல்லது பணிப்பொன்று உரிய அந்நபருக்கு தனிப்பட்ட வகையில் ஒப்படைத்தலில் அல்லது அவரின் வதிவிடத்துக்கு நன்றாக தெரிகின்ற இடமொன்றில் ஒட்டுதல் அல்லது ஆட்சபையொன்று அல்லது கூட்டுத்தாபனமொன்று தொடர்பிலாயின் அவ்வலுவலகத்துக்கு ஒப்படைத்தலின் அல்லது அந்நபருக்கு அல்லது சபைக்கு அல்லது கூட்டுத்தாபனத்துக்கு பதிவுத்தபாலில் அனுப்புவது முறையான ஒப்படைத்தலாக கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்றல்.

43. இந்நியதிச்சட்டத்தின் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்களமொழியிலான உரையே அதிகாரம்கொண்டிருக்கும்.

பொருள் கோடல்.

44. இந்நியதிச்சட்டத்தின் பதங்கள் தொடர்பில் வேறுவகையில் பொருள் தேவைப்பட்டாலன்றி.-

"மாகாணம்" என்பது பதுளை மற்றும் மொனறாகலை ஆகிய இரு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய ஊவா மாகாணம் எனப் பொருள்படும்.

"மாகாண சபை" என்பது ஊவா மாகாண சபை எனப் பொருள்படும்.

"மாகாண அமைச்சர்" என்பது, வீதி அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான ஊவா மாகாண சபையின் அமைச்சரென பொருள்படும்.

"செயலாளர்" என்பது, ஊவா மாகாணத்தின் வீதி அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சு செயலாளர் எனப் பொருள்படும்.

"வீதி" எனும் சொல்லானது, வழிகளும், வீதிகளும் கட்டளைச்சட்டத்தினில் அதற்கு வழங்கப்பட்டுள்ள அர்த்தமே உள்ளது.

"வீதிகளை அபிவிருத்திச் செய்தல்" எனும் சொல்லானது, புதிய வீதிகளை நிர்மாணித்தல், மற்றும் புதிய மற்றும் தற்போதைய வீதிகளை பராமரிப்புச் செய்தலும், விருத்தி செய்தலும் எனப் பொருள்படும்.

"கால்வாய்" எனும் சொல்லானது, ஏதேனும் பொதுக் கால்வாயென பொருள்படுவதுடன் அதற்குரிய பக்கம் வழிந்தோடும் வழி, கரை, காண் மற்றும் கிடங்குகள் சகிதம் கரைக்குக்கரையே உள்ள வீதி வழியின் முழு அளவும் இதனில் உள்ளடங்கும்.

"மாகாண வீதிப்பணிப்பாளர்" எனும் சொல்லானது, ஊவா மாகாணத்தின் வீதிகள் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளரென பொருள்படும்.

''பிரதான பொருளியலாளர்'' எனும் சொல்லானது, ஊவா மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் சகல பிரதான பொறியியலாளர்கள் அல்லது பிரதான நிறைவேற்று பொறியியலாளர்கள் எனப் பொருள்படும்.

''பிரதேச பொறியியலாளர்'' எனும் சொல்லானது, ஊவா மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் சகல பிரதேச பொறியியலாளர்கள் அல்லது பிரதேச நிறைவேற்றுப் பொறியியலாளர்கள் அல்லது கோட்டத்துக்கு பொறுப்பான நிறைவேற்று பொறியியலாளர்களென பொருள்படும்.

''தேசிய பெருந்தெருக்கள்'' எனும் சொல்லானது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெருந்தெருக்கள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்டு, வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, தேசிய பெருந்தெருக்களென பொருள்படும்.

''மக்கள் கருமங்கள்'' எனும் சொல்லானது, இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலமைந்த சட்டத்தின் கீழ் மக்கள் கருமங்களாக கொள்ளப்படும் பணிகள் உள்ளடங்கும்.

''உபயோகச் சேவை'' சொல்லானது, தொலைபேசி இணைப்புக் கம்பிகளை குழியிடுவதற்கு காண்களைத் தோண்டுதல், நீர்குழாய்களை பொருத்துதலுக்காக காண்களைத் தோண்டுதல், மின்கம்பங்கள் தொலைபேசிக் கம்பங்கள், நடுவது போன்ற எல்லாவகையான செயற்பாடுகளுக்குமென இதனில் பொருள்படும்.

6-487

---

### மேல் மாகாண மாகாண சபை

1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மற்றும் 1995 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கொண்ட நியதிச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மேல் மாகாண மாகாண சபையின் வழிப்பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகள், நிதிகள், கட்டளைகள், ஒப்படைப்புக்கள் என்பனவற்றின் திருத்தங்கள்.

1996, ஒகத்து மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை 937/05 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாண மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வழிப்பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையின் கட்டளைகளில் 3 ஆவது பிரிவு இவ்வாறு திருத்தப்படுகின்றது.

2003, சனவரி 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை 1273 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அப்பிரிவின் 6 ஆவது விடய அலகு உட்பட 12, 13, 14, 15 ஆகிய இலக்கங்கள் புதிதாக உள்ளடக்கப்பட்ட விடய அலகுகளும் மீண்டும் திருத்தப்படுகின்றன.-

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | பிரயாண சேவைக்கான அனுமதிப்பத்திரம் ஒரு பஸ் வண்டிக்கு | 5,000 0 |
| 2. | குறுக்குப் பாதை அனுமதிப்பத்திரம் போக்குவரத்து வழி ஒன்றிற்கு ஒரு பஸ் வண்டிக்கு | 2,500 0 |
| 3. | பிரயாண சேவைக்கான அனுமதிப்பத்திரத்தின் பிரதிக்கு (காணாமற் போன சந்தர்ப்பத்தில்) | 2,000 0 |
| 4. | பிரயாண சேவைக்கான அனுமதிப்பத்திரத்தின் திருத்தங்களுக்கு | 250 0 |
| 5. | பிரயாண சேவைக்கான அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கும் புதுப்பிக்காவிடில் செலுத்தவேண்டிய தண்டப்பணம் ஒவ்வொரு மாதமும் அல்லது அதற்குப் பிற்பட்ட காலத்திற்கு அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 10% | 10% |
| 6. | மாதாந்த சேவைகள் கட்டணம் ஒரு பஸ் வண்டிக்கு (சாதாரண சேவை) | 1,000 0 |
| 7. | குறிப்பிட்ட தினத்தில் மாதாந்த சேவைகள் கட்டணம் செலுத்தாமையால் சேவைகள் கட்டணத்தில் 10% (மாற்றப்படவில்லை) | 10% |
| 8. | பிரயாண சேவைக்கான அனுமதிப்பத்திரத்தின் விபரங்கள் குறிப்பிடப்பட்ட வின்ஸ்கிரீன் லேபலுக்கு | 200 0 |

| | | ரூபா ச. |
|---|---|---|
| 9. | வின்ஸ்கிரீன் லேபலின் பிரதிக்கு | 200 0 |
| 10. | வின்ஸ்கிரீன் லேபல் திருத்தத்திற்கு | 200 0 |
| 11. | (அ) விசேட வாடகைப் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் முதல் நாளுக்கு | 200 0 |
| | (ஆ) மேலதிக ஒவ்வொரு நாளுக்கும் | 200 0 |
| 12. | மாதாந்த நுழைவுக் கட்டணம் ஒரு பஸ் வண்டிக்கு (சாதாரண சேவை) | 1,000 0 |
| 13. | மாதாந்த நுழைவுக் கட்டணம் ஒரு பஸ் வண்டிக்கு (சொகுசு சேவை) | 1,000 0 |
| 14. | பிரயாண சேவைக்கான அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்திற்கு ஒரு சொகுசு பஸ் வண்டிக்கு | 5,000 0 |
| 15. | மாதாந்த சேவைகள் கட்டணம் ஒரு சொகுசு பஸ் வண்டிக்கு | 1,000 0 |

இத்திருத்தங்களிற்கான கட்டளை 2010.07.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

எச். எம். உபாலி கொடிகார,
போக்குவரத்து, விளையாட்டுத்துறை,
இளைஞர் விவகாரங்கள், கலாசார மற்றும்
கலை அலுவல்கள், கூட்டுறவு அபிவிருத்தி, உணவு
வழங்கல் மற்றும் விநியோகித்தல் மற்றும் கிராமிய
அபிவிருத்தி அலுவல்கள் தொடர்பான அமைச்சர்,
(மேல் மாகாண மாகாண சபை).

கொழும்பு,
2010.06.01.

6-489

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.